இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 402
சனி, 01 ஆகஸ்ட், 2026 |
பக்கங்கள் 19
www.ilakku.org









# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில் முன்னாள் காவல்துறை மா அதிபருக்கு மரண தண்டனை



போதிய புலனாய்வுத் தகவல்கள் முன்கூட்டியே கிடைத்திருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் முன்னாள் காவல்துறைமா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றம் நேற்று (31) மரண தண்டனை விதித்துள்ளது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் காவல்துறைமா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரிகை தொடர்பான தீர்ப்பை நேற்று அறிவிக்கும் போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலகரத்ன பண்டார ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டது. இந்த வழக்கில், 2022 ஆம் ஆண்டு மூவரடங்கிய மேல் நீதிமன்ற ஆயம் இரு பிரதிவாதிகளையும் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்திருந்தது. எனினும், அந்தத் தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் தாக்கல் செய்த மேன்முறையீட்டை விசாரித்த உயர்நீதிமன்றம், விடுதலைத் தீர்ப்பை இரத்து செய்து, பிரதிவாதிகளின்

தொடர்ச்சி: பக்கம் 17

## செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்: சுயாதீன சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தல்




யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு நீதி கோரி, யாழ்ப்பாணம் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் அமைதிப் போராட்டம் வியாழக்கிழமை செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது, பேரணியின் நிறைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் வாசித்தார்.

அறிக்கையில்,

01. சர்வதேச விசாரணை: செம்மணி மனிதப் புதைகுழியில் 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி வரையில் சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை

தொடர்ச்சி: பக்கம் 17

## அபகரிக்கப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு: வலி வடக்கு மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழு கடும் எதிர்ப்பு

மக்களின் கோரிக்கைக்கும் விருப்பங்களுக்கும் மாறாக, இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள பூர்வீக நிலங்களுக்கு இழப்பீடு வழங்கும் சதி முயற்சியை அரசின் ஏவுதலுடன் சில அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாக வலி வடக்கு மீள் குடியேற்ற அபிவிருத்தி குழு கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த சதி முயற்சியின் ஒரு கட்டமாக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இழப்பீடு வழங்குவதற்கான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, காணிகளை இழந்து தவிக்கும் மற்றும் எக்காலத்திலும் இழப்பீடு கோராத மக்களுக்கே பிரத்தியேகமாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு அழைக்கப்படும் மக்களிடம் ஏதோ ஒரு வகையில் சம்மதத்தைப் பெற்று, அவர்களின் பூர்வீகக் காணிகளை நிரந்தரமாகக் கபளீகரம் செய்யவே இன்றைய அரசும் அதன் அதிகாரிகளும் தீவிரமாக முயற்சிக்கின்றனர் என்று அக்குழு எச்சரித்துள்ளது. இராணுவப் பிடிக்குள் இருக்கும் தமது சொந்த நிலங்களை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு கோரி மயிலிட்டி மக்கள் தொடர்ந்து 15 வாரங்களாகத் தொடர் அடையாளப்

தொடர்ச்சி: பக்கம் 17

# இஸ்ரேலின் இனப்படுகொலையில் இந்தியாவும் பங்காளி: அனைத்துலக மன்னிப்புச் சபை



காசாவில் "பாலஸ்தீனர்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இனப்படுகொலையில்" பயன்படுத்தப்படக்கூடிய "கணிசமான ஆபத்து" இருந்தபோதிலும், இந்தியா இஸ்ரேலுக்கு ஆயுதங்களை தொடர்ந்து வழங்கி வருவதாக அனைத்துலக மன்னிப்புச் சபை (Amnesty International) தெரிவித்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த இந்த அமைப்பு, இந்தியா எவ்வாறு "இஸ்ரேலின் பாதுகாப்புத் துறையுடன் நெருக்கமான மற்றும் லாபகரமான கூட்டாண்மையை உருவாக்கியுள்ளது" என்பதையும், "இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விநியோகச் சங்கிலிகளில் ஒரு முக்கிய பங்களிப்பாளராக மாறியுள்ளது" என்பதையும் வியாழக்கிழமையன்று (30) ஆவணப்படுத்தியது.

"அக்டோபர் 7, 2023 முதல் (காசா மீதான இஸ்ரேலின் மிகப்பெரிய தாக்குதல் தொடங்கிய நாள்) இந்தியாவிலிருந்து இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்ட ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் உதிரிபாகங்கள் அடங்கிய 2,596 சரக்கு ஏற்றுமதிகளை அனைத்துலக மன்னிப்புச் சபை ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்" என்று 'இஸ்ரேலுக்கான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் விநியோகம்' என்ற தலைப்பிலான அந்த அறிக்கை தெரிவித்தது.

அந்த அறிக்கையின்படி, இந்திய நிறுவனங்கள் குறைந்தது 390,516 சிறிய ரக இராணுவ ஆயுதங்களுக்கான பாகங்கள், 564,970 வெடிபொருள் சார்ந்த பாகங்கள் (ட்ரோன் போர்முனைகள் மற்றும் பீரங்கி குண்டுகளின் உறைகள் போன்றவை) மற்றும் 298 இராணுவ வாகனங்களுக்கான உதிரிபாகங்களை இஸ்ரேலிய இராணுவ

தொடர்ச்சி: பக்கம் 09

## ரஷ்யாவில் தேடப்படுவோர் பட்டியலில் டெலிகிராம் நிறுவனர்



பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக ரஷ்ய குடிமக்களை ஆட்சேர்ப்பு செய்ய உக்ரேனிய சிறப்பு சேவைகளை அனுமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், டெலிகிராம் நிறுவனர் பாவெல் துரோவ் ரஷ்யாவில் தேடப்படலாம் என்று ஃபெடரல் பாதுகாப்பு சேவை (FSB) புதன்கிழமை(29) அறிவித்தது. மேலும், அவரை சர்வதேச அளவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அது கூறியது.

டேட்டிங்கிற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட டெலிகிராம் சேனல் குறித்த விசாரணையின் போது இந்தக் குற்றச்சாட்டு எழுந்தது. FSB-யின்படி, உக்ரேனிய உளவாளிகள் அங்கு வழக்கமாக, தங்களுக்கு வரக்கூடியவர்களிடமிருந்து சிறிய பரிசுகளைக் கோரும் காதல் நாட்டம் கொண்ட பெண்களாக நடித்துள்ளனர்.

ஒரு பரிசுக்குப் பணம் செலுத்திய பிறகு, இலக்கு வைக்கப்பட்டவர், ரஷ்ய சட்ட அமலாக்க அதிகாரிகளாக நடித்த உக்ரேனியர்களால் அழுத்தம் கொடுக்கப்படுவார். அவர்கள் அறியாமல் கீவ்வின் போர் முயற்சிகளுக்கு உதவியதாகவும், ஆனால் போலி அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் சில சலுகைகளைப் பெறலாம் என்றும் கூறுவார்கள். இதன் மூலம், குழப்பமடைந்த இளைஞர்கள், தீ வைப்புத் தாக்குதல்கள் அல்லது பண மோசடிக்கான கூரியர்களாகச் செயல்படுவது போன்ற உண்மையான குற்றங்களைச்

தொடர்ச்சி: பக்கம் 16

## உலகை அதிர வைத்த சீன நிறுவனம் – அச்சத்தில் அமெரிக்கா




சீனாவின் மிகப்பெரிய மெமரி-சிப் (memory-chip) தயாரிப்பு நிறுவனமான ChangXin Memory Technologies (CXMT), பங்குச் சந்தையில் அறிமுகமான உடனேயே அதன் பங்குகள் ஐந்து மடங்கிற்கும் அதிகமாக உயர்ந்ததைத் தொடர்ந்து, சீனாவின் மிக மதிப்பு மிக்க பட்டியலிடப்பட்ட நிறுவனமாக மாறியுள்ளது.

திங்களன்று(27) நடைபெற்ற இந்த ஆண்டின் ஆசியாவின் மிகப்பெரிய பொதுப் பங்கு வெளியீட்டில் (IPO) இந்நிறுவனம் 57.9 பில்லியன் யுவான் (8.6 பில்லியன் டாலர்) நிதியைத் திரட்டியது. ஷாங்காய் பங்குச் சந்தை வர்த்தகத்தில் அதன் பங்குகள் 466% உயர்ந்தன, இதன் மூலம் நிறுவனத்தின் சந்தை மதிப்பு சுமார் 3.3 டிரில்லியன் யுவானாக அதிகரித்தது.

2016-ல் நிறுவப்பட்ட CXMT, ஸ்மார்ட்போன்கள், தனிநபர் கணினிகள், சர்வர்கள், செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகள் மற்றும் ராணுவ உபகரணங்களில் பயன்

தொடர்ச்சி: பக்கம் 11

## புதிய நோய்: ஒரே மாதத்தில் 15 யானைகள் உயிரிழப்பு



கென்யாவின் அம்போசெலி (Amboseli) சூழல் மண்டலத்தில் கடந்த ஒரு மாதத்தில் 15 யானைகள் உயிரிழந்துள்ளன. ஆரம்பக்கட்ட ஆய்வகப் பரிசோதனைகள் ஏதோ ஒரு நச்சுப் பொருள் காரணமாக இருக்கலாம் என்று சுட்டிக் காட்டுவதாக, கென்யா வனவிலங்கு சேவையை (KWS) மேற்கோள் காட்டி உள்ளூர் ஊடகங்கள் புதன்கிழமை(29) செய்தி வெளியிட்டுள்ளன.

அம்போசெலி தேசிய பூங்கா, கிமானா சரணாலயம் மற்றும் குக்கு பண்ணை (Kuku Ranch) ஆகிய பகுதிகளில் ஜூன் 24 முதல் ஜூலை 24 வரையிலான காலகட்டத்தில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக 'தி ஸ்டார்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. உயிரிழந்த யானைகளில் பத்து யானைகளுக்கு இறப்பதற்கு முன் ஒரே மாதிரியான அறிகுறிகள் தென்பட்டன; குறிப்பாக, அவற்றால் எழுந்து நிற்க முடியாத வகையிலான பகுதி அளவு

தொடர்ச்சி: பக்கம் 12

## மலையகத் தமிழரின் 200 ஆண்டுகால தியாகங்கள் நினைவுகூரல்!

மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, 'மாண்புமிகு மலையகம்' அமைப்பினால் 2023-ஆம் ஆண்டு தலைமன்னாரில் அமைக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நினைவுத்தூபியில் இந்த வாரம் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மலையக மக்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மன்னார் பகுதி மக்கள் திரளாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



நிகழ்வின் போது, இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக மலையக மக்கள் சிந்திய வியர்வையும், செய்த தியாகங்களும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டன. இருநூறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தொடரும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவர்களின் அடிப்படை மனித உரிமைகளையும் கண்ணியத்தையும் உறுதி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டது.

இதன் போது மலையக மக்கள் சார்ந்து மேற்கொள்ள வேண்டிய முக்கிய கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன



**1. மலையக மக்களின் வரலாறு, போராட்டங்கள், தியாகங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரப் பங்களிப்பை அரசு அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும்.**

**2. மலையக மக்களைச் சம உரிமையுள்ள குடிமக்களாகவும், தனித்துவமான வரலாறு, அடையாளம் மற்றும் பண்பாட்டைக் கொண்ட சமூகமாகவும் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.**

**3. கல்வி, சுகாதாரம், காணி, வீடமைப்பு, குடிநீர் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் தேசிய சராசரிக்கு நிகராக மலையக சமூகத்தை உயர்த்தச் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.**

**4. வாழ்வாதாரத்திற்குப் போதுமான நியாயமான ஊதியம், கண்ணியமான வேலை, சட்டப் பாதுகாப்பு, பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் ஆண்பெண் தொழிலாளர்களுக்குச் சம ஊதியம் உறுதி செய்யப்பட வேண்டும்.**

**5. ஒவ்வொரு மலையகக் குடும்பத்திற்கும் சட்டபூர்வமான, பாதுகாப்பான காணி மற்றும் சொந்த வீட்டு உரிமையை வழங்கிட வேண்டும்.**

**6. மலையக மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களிலும் தமிழ் மொழியின் பயன்பாடும் சம அந்தஸ்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.**

**7. சேவைகள், சமூக நலத் திட்டங்கள் மற்றும் நீதித்துறை அணுகல் ஆகியவை பாகுபாடின்றி அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.**

**8. பெருந்தோட்டக் குடியிருப்புகளை அனைத்து வசதிகளும் கொண்ட, மனித கண்ணியத்துடன் வாழக்கூடிய கிராமங்களாக மாற்றுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டன.**

இருநூறு ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியில், இன்னும் பூர்த்தியாகாத மலையக மக்களின் உரிமைகள், சமத்துவம் மற்றும் நீதியைச் சாத்தியமாக்க இலங்கை அரசும் சமூகமும் உடனடியாக செயல்பட வேண்டும் என்று இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

## ஆசிரியர் தலையங்கம் | 01 ஆகஸ்ட், 2026

## நீதியும் மக்கள் இறைமையும் மறுக்கப்படும் உலகில் தேசிய ஒருமைப்பாடே ஒரே பலம்

இன்றைய உலகில் ட்ரம்பிசம் அமெரிக்க அரசியலில் கூட்டாட்சியின் பலத்தை ஒடுக்கி அரச அதிப சர்வாதிகாரத்தை மக்கள் வாக்குப்பலத்தின் வழியாகவே வெளிப்படையாக முன்னெடுக்கிறது. இதன் வெளிவிவகாரக் கொள்கையாக அமெரிக்க அணுவாயுதப் பலத்தை முன்னிறுத்தி உலகின் மூலவளங்களையும் மனித வலுவையும் மூலதனங்களையும் அமெரிக்கா பயன்படுத்துவது அமெரிக்காவின் உரிமையாகும் என்பதாகவுள்ளது. இதனை எதிர்ப்பவர்கள் ஆட்சி மாற்றத்துக்கு அல்லது சுதந்திரமாகச் செயற்படாதவாறு தடுக்கப்படுவதற்கு உள்ளாவதை எந்த அனைத்துலக சட்டங்களாலேயோ அல்லது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தாலேயோ தடுக்க இயலாது அவற்றை வல்லாண்மை நிலை கொண்டு ஒடுக்குவது. கூடவே அமெரிக்கக் கண்டத்து அயல்நாடுகள் அனைத்தும் அமெரிக்காவின் மேலாண்மைக்குரிய நிலப்பரப்புக்களே என்ற நிலைப்பாட்டுடன் கிறீன்லாந்து முதல் கனடா வரை அணுகுவது. இத்தகைய நீதியும் மக்கள் இறைமையும் மறுக்கப்படும் உலகில் தேசிய ஒருமைப்பாடே மக்கள் இறைமையைப் பேணுவதற்கான பலமாக உள்ளதென்பதை இலக்கு, கிறீன்லாந்து, கியூபா, வெனிசுலா, மெக்சிக்கோ, கியூபா வாழ் மக்களின் தேசிய ஒருமைப்பாடு ட்ரம்பின் திட்டங்களைத் தடுப்பதற்கான ஒரே பலமாக உள்ளதை எடுத்துரைக்க விரும்புகிறது.

இன்று ட்ரம்பிசத்தையே அநுரகுமாரிசமும் சிறிலங்காவின் அரசியலில் முன்னெடுக்கிறது என்பது இலக்கின் இவ்வாரக் கவனப்படுத்தலாக உள்ளது. ஆயினும் ஒரு வேறுபாடு அணுவாயுதப் பலம் இல்லாவிட்டாலும் வல்லாண்மைகளுடனும் கூட்டாண்மைகளுடனும் இலங்கைத் தீவின் நில கடல் வானைப் பகிர்ந்து இணைந்து அந்தப்பலத்தில் அரசஅதிபர் சர்வாதிகாரத்தை முன்னெடுப்பது என்பதாக உள்ளது.

இந்தக் கூட்டாண்மை பங்காண்மைகள் தரும் துணிவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் பிரித்தானிய காலனித்துவ காலம் வரை ஈழத்தமிழரின் யாழ்ப்பாண – வன்னி அரசுக்களாக உலகின் நவீன அரசியலில் தெளிவாக இனங்காணப்பட்ட ஈழத்தமிழரின் தாயக நிலப்பரப்புக்களை சிங்கள பௌத்தர்களின் பௌத்த மதப்புனிததலங்கள் சிங்கள தொல்லியல் மானிடவியல் வனவியல் எச்சங்கள் காணப்படும் நிலப்பகுதிகள் எனப் பலவகையான நியாயப்படுத்தலூடாக அநுர அரசு ஆக்கிரமிக்கிறது என்பதனை இன்று உலகம் தெளிவாகக் காண்கிறது என்பதனைப் பல அனைத்துலக சமுக ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த ஈழத்தமிழர் தாயக நில ஆக்கிரமிப்பை, 1983 ஆடி ஈழத்தமிழின அழிப்பின் மூலகர்த்தாவான ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கால அமைச்சர் சிறில் மத்தியூ 1970களில் திட்டமிட்ட முறையில் வரைந்த இலங்கை வரைபடமொன்றின் அடிப்படையில் தனது அமைச்சுக்கள் வழி அநுர அரசு முன்னெடுத்து வருகின்றது. இதன் வழி ஐக்கிய தேசியக்கட்சியின் ஈழத்தமிழின அழிப்பின் அங்கமாக தேசிய மக்கள் சக்தி தன்னையும் இணைத்துக்கொள்கிறது.

அவ்வாறே 1999 செம்மணியில் 35 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டது குறித்த விசாரணையைக் கிடப்பில் போட்ட சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசியலின் அங்கமாகத் தேசிய மக்கள் சக்தி திகழ்வதால் கடந்த 27 ஆண்டுகள் ஈழத்தமிழரைச் சிறிலங்கா இராணுவம் கொத்துக் கொத்தாகக் கொரூரமான முறையில் செம்மணியில் இனஅழிப்பு நோக்கில் கொன்று குவித்த இனப்படுகொலைகளுக்கு ஈழத்தமிழர் அனைத்துலக நீதியைக் கோரி வருநிலையில், அதனை இன்று அகழ்ந்தெடுக்கப்பட்ட சான்றுகள் இனவழிப்புக்கான சான்றுகள் ஐநூறைத் தாண்டி சான்றாதாரப்படுத்தும் நிலையில், உலகில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை நீதிக்காகக் குரல் கொடுக்க வைக்கிறது. இந்நிலையை அநுர அரசு உள்ளக விசாரணை மூலமே நீதிப்படுத்த வேண்டுமென வாதிட்டு சிறிலங்காவின் இறைமையுள் யாருமே தலையிட முடியாதென தடுத்து வருகிறது. ஆயினும் நீதியான உள்ளக விசாரணைக்குரிய செயற்பாடுகள் எதனையும் இதுவரை அநுர அரசு செய்யவில்லை.

இவை சிங்கள அரசுக்களின் ஈழத்தமிழின நில அபகரிப்பை மட்டுமல்ல ஈழத்தம்pழின அழிப் பையும் தன்னை இடதுசாரித் தோழராகவும் அமெரிக்க நண்பராகவும் சீனாவின் துணையாளராகவும் இந்தியாவின் கூட்டாண்மை பங்காண்மையாளராகவும் நான்கு வகை முகத்துடன் அரசியல் பிரம்மாவாகத் திகழும் அநுரகுமார உளமார ஏற்றுச் செயற்படுவதற்கு உதாரணமாகிறது.

இந்த உள் போக்கை அறியாத ஈழத்தமிழின இளைய சமுதாயத்தை "பிரதேச அபிவிருத்தி" வழி அவர்களுக்கான வளமான வாழ்வை அநுர உருவாக்குவார் என்ற நம்பிக்கை திட்டமிட்ட முறையில் தேசிய மக்கள் சக்தியினரால் வளர்க்கப்பட்டு அவர்களது வாக்குப்பலத்தை மட்டுமல்ல செயற்பாட்டுத் திறன்களையும் தேசிய மக்கள் சக்தி தனதாக்கிடப் பகிரதப்பிரயத்தனம் செய்வதை ஈழத்தமிழர் தாயகச் செய்திகள் நாளாந்தம் வெளிப்படுத்துகின்றன.

இதன் உச்சமாக சிறிலங்காவின் பொதுநிர்வாகம் மகாணசபைகள் உள்ராட்சி சபைகளுக்கு 2026 இல் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியினை கொண்டு எவ்வாறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற முற்திறனாய்வும் 2027 வரவுசெலவுத் திட்டத்தில் எவ்வாறு நிதி ஒதுக்குவது என்ற முற்திட்டமிடலும் ஒருங்கே கொழும்பில் இடம்பெற்ற 31.07.2026 கூட்டத்தில் சிறிலங்காவின் அரசத் தலைவர் அநுரகுமார திசநாயக்கா "பிரதேச நிர்வாக அலகுகளை பிரதேச அபிவிருத்தி அலகுகளாக" மாற்றுவதற்கான செயற்திட்டங்களை முன்னெடுக்குமாறு பணித்துள்ளார். அதாவது அநுரகுமாரிசத்தின் மாற்றம் அல்லது தீர்வு என்பது சிங்கள நாட்டின் சிங்களச் சட்டத்தில் இடம்பெறும் பிரதேச நிர்வாகங்கள் போதிய அபிவிருத்தியை அளிக்காத காரணத்தால் அவற்றை பிரதேச அபிவிருத்தி அலகுகளாகவே மாற்றி விடுவது என்பதாகவுள்ளது.

இந்நிலையில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளோ ஆறுகட்சி இணைப்பு ஆதரித்த இணைப்பு என்று எல்லாம் கூட்டணி அமைக்கின்றனரே தவிர ஈழத்தமிழர்களின் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும் ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்புடன் கூடிய அமைதியை வளர்ச்சியை அவர்களிடமிருந்து வரி அறவிடும் சிறிலங்கா செய்தேயாகவேண்டும் எனப் பேசும் துணிவில்லையென்பதையே அங்கிருந்து வரும் செய்திகள் தெளிவாக்குகின்றன.

இந்நிலையில் இதுவரை அதிகாரப்பரவலாக்கல் குறித்த கூட்டாட்சி பேசப்பட்டதாலேயே உரிய தீர்வை ஈழத்தமிழர்களால் பெற முடியவில்லை இனி சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி என்ற கோரிக்கையை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் யாழ்ப்பாணப் பாராளமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிவருகின்றார். இது இடைக்காலத் தீர்வாகக் கட்டமைந்தாலே இன்று ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தமது நாளாந்த வாழ்வினை முன்னெடுக்கும்போது தங்கள் வரியினைப் பெறும் சிறிலங்காவுக்கு அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அந்த வரியினை மீள் பகிர்வு செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளதென்பதை உறுதிப்படுத்தும். இதனைச் சிறிலங்கா செய்யாது விட்டால் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே அமைத்துக் கொள்வது இலகுவாக அமையும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

அதே வேளை ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினை அவர்களின் இறைமையை சிறிலங்கா ஏற்று இறைமைப்பகிர்வுகளுடன் கூடிய இலங்கைத் தீவாக இலங்கைத்தீவின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் என்பதாக அமைகின்ற காலம் வரும்வரை இலங்கைத் தீவின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலை என்பது நடைமுறைச் சாத்தியமாகாது என்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது. இதற்கு தேசிய ஒருமைப்பாடு ஈழத்தமிழரிடை வலுவடைய வேண்டும் என்பதனை வலியுறுத்தவே போரைச் சந்திக்கின்ற நேரத்திலும் உக்ரேன் மக்கள், பலஸ்தீன, ஈரானிய மற்றும் லெபனிய மக்கள் எவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டுடன் உறுதியின் உறைவிடமாக உள்ளனர் என்பதை ஈழத்தமிழர்கள் மனதிருத்த வேண்டிய நேரமிது என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**




இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள ஆபத்தான சூழல் தோன்றியுள்ளது.



நாட்டில் மந்தகதியில் இயங்கிவரும் நீதித்துறைச் செயன்முறையினால் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை விரைவுபடுத்தவும், அனுபவமிக்க நீதிபதிகளின் சேவையைப் பயன்படுத்தவும் என்ற போர்வையில், நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு தற்போதைய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 107(1) ஆம் பிரிவில் திருத்தம் மேற்கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை 63 இலிருந்து 65 ஆகவும், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை 65 இலிருந்து 67 ஆகவும் உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.

அதேபோன்று பிரதம நீதியரசரின் வயதெல்லையை 67 அல்லது அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு அதிகபட்சம் ஆறு ஆண்டுகள் என்று திருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மேல் நீதிமன்ற நீதிபதிகளின் வயதெல்லையை 61 இலிருந்து 63 ஆகவும், கீழ் நீதிமன்ற நீதிபதிகளான நீதிவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகளின் வயதெல்லையை 60 இலிருந்து 62 ஆகவும் அதிகரிப்பதற்கு 'நீதிச்சேவை ஆணைக்குழு சட்டத்தை' திருத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிப்படையில் பார்க்கின்றபோதும், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு அணியான மக்கள் ஆணைக்கான சட்டத்தரணி குழுவினர் சுட்டிக்காட்டுவதுபோல குறித்த அரசியலமைப்பு திருத்தமானது நீதித்துறையை நவீனமயமாக்கும் சட்டச் சீர்திருத்தமாகத் தோன்றினாலும், அரசாங்கத்தின் இந்த நகர்வு தூரநோக்கற்றதும், ஜனநாயகக் கட்டமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் கடுமையாகப் பாதிக்கும் ஆபத்தான அரசியலமைப்பு சூழ்ச்சியாகும்.

அரசாங்கம் தனது தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்காக, உலக நாடுகளில் காணப்படும் நீதிபதிகளின் உயர் ஓய்வுபெறும் வயதெல்லையை முதன்மையான சான்றாகக் காண்பிப்பதற்கு முற்படுகிறது.

அமைச்சரவை ஒப்புதலின்போது, அவுஸ்திரேலியாவில் 70, கனடா மற்றும் பிரேசிலில் 75, டென்மார்க்கில் 73, சுவீடனில் 69, சுவிட்சர்லாந்தில் 68, ஐஸ்லாந்து மற்றும் ஜப்பானில் 70 என்ற அடிப்படையில் ஓய்வுபெறும் வயதெல்லை காணப்படுவதாகவும், அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு எவ்வித வயதெல்லையும் நிர்ணயிக்கப்படாமல் வாழ்நாள் நியமனமாக அளிக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இருப்பினும், சர்வதேச அனுபவங்களையும் பிற நாடுகளின் சட்ட நடைமுறைகளையும் இலங்கையின் அரசியலமைப்புச் சூழலோடு நேரடியாக ஒப்பிட்டுப் பார்ப்பது முற்றிலும் பொருத்தமற்ற, தவறான வாதமாகும்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சுட்டிக்காட்டியது போல, அயல் நாடான இந்தியாவில் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது 62 ஆகவும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு 65 ஆகவும் இருக்கும் போது, இலங்கைத் தேவைகளுக்கு ஏற்ப மிகவும் புத்திசாலித்தனமாக உருவாக்கப்பட்ட அரசியலமைப்பை விடுத்து, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக முற்றிலும் வேறுபட்ட மேற்கத்திய நாடுகளை உதாரணமாகக் கொண்டு வயதை உயர்த்த வேண்டிய அவசியமோ கட்டாயமோ இங்கு தற்போது எழவில்லை.

அத்துடன், உலகில் ஓய்வுபெறும் வயதெல்லை உயர்த்தப்பட்ட அல்லது சீரமைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அனைத்தையும் கூர்ந்து அவதானித்தால், அவை அனைத்தும் முறையான, வெளிப்படைத்தன்மை கொண்ட, பல ஆண்டுகள் முன்னெடுக்கப்பட்ட பரந்த கலந்தாலோசனைகளின் பின்னரே மேற்கொள்ளப்பட்டுள் ளன என்பது தெளிவாகும்.

மாறாக, இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் இந்த அவசரத் திருத்தமானது, நீதித்துறை, சட்டத்தரணிகள் சமூகம், கல்வியியலாளர்கள், சிவில் சமூகம் அல்லது ஏனைய பங்குதாரர்களுடன் எவ்வித விரிவான கலந்துரையாடல்களும் இன்றி தன்னிச்சையாகவும் அவசர அவசரமாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சினால் சகல பங்குதாரர்களுடனும் நடத்தப்பட்ட விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் தயாரிக்கப்பட்ட 'இலங்கையின் நீதித்துறை பற்றிய மதிப்பீடு மற்றும் மூலோபாய நடவடிக்கைத் திட்டம்: வணிக, ஒப்பந்த மற்றும் முதலீட்டுச் சட்டங்களை நடைமுறைப்படுத்தல்' என்ற ஆவணத்தில் கூட, நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது முக்கிய கட்டமைப்புச் சீர்திருத்தமாக பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறிருக்க, எந்தவொருபொதுக்கோரிக்கையோ அல்லது கட்டமைப்பு ரீதியான நியாயப்படுத்தலோ இன்றி, அவசர அவசரமாக வயதெல்லையை அதிகரிக்கும் யோசனையை அமைச்சரவையில் நிறைவேற்றியிருப்பது அரசாங் கத்தின் அரசியல் உள்நோக்கத்தையே வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

இந்த ஓய்வுபெறும் வயதெல்லை அதிகரிப்பானது, தற்போதைய பிரதம நீதியரசர் உள்ளிட்ட குறிப்பிட்ட சில நீதிபதிகளுக்கு சலுகை வழங்கும் நோக்கிலும், ஓய்வுபெறும் தருவாயில் இருக்கும் தமக்கு சாதகமான நீதிபதிகளுக்கு

## விதுரன்

வழங்கப்படும் 'மறைமுக இலஞ்சம' போலவே செயற்படும் என்ற பலத்த சந்தேகம் சமூகத்தில் காணப்படுகின்றது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் 3,000க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை முற்றாக நிராகரித்துள்ளதுடன், இது குறிப்பிட்ட சில நீதிபதிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எனச் சாடியுள்ளனர்.

அத்துடன், பொதுநலவாயச் சட்டத்தரணிகள் சங்கமும் இலங்கை அரசாங்கத்திற்கு விடுத்துள்ள எச்சரிக்கையில், அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களை இவ்வாறான அவசரமான அல்லது தற்காலிக முறையில் கொண்டுவருவது அரசியலமைப்பின் புனிதத்தைக் குறைத்துவிடும் என்றும், இது நீதித்துறையின் சுயாதீனத்தில் பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைக் கடுமையாகச் சீர்குலைக்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

லற்றிமர் ஹவுஸ் கொள்கைகள் (Latimer house Principles) மற்றும் கோவா பிரகடனம் 2023 ஆகியவற்றின் படி, நீதித்துறையின் சுயாதீனத்தையும் நடுநிலைமையையும் பாதுகாப்பது அரசாங்கங்களின் தலையாய கடமையாகும்.



வழக்குகளின் தேக்க நிலையைக் குறைப்பதே தமது நோக்கம் என்று அரசாங்கம் கூறுவது தர்க்கரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாதவொரு ஏமாற்று வாதமாகும்.

வயது கூடும்போது மனித இயல்புக்கும் உடலியல் திறனுக்கும் ஏற்ப செயற்றிறன் குறையுமே தவிர அதிகரிக்காது. ஓய்வுபெறும் வயதில் அனுபவமிக்கவர்கள் விலகும் போதுதான் திறமையான, சுறுசுறுப்பான இளைஞர்கள் நீதித்துறைப் பதவிக்கு வர முடியும்.

உண்மையிலேயே வழக்குகளை விரைவுபடுத்த அரசாங்கம் விரும்பியிருந்தால், உயர் நீதிமன்றங்களில் கடந்த பல மாதங்களாக வெற்றிடமாக உள்ள எட்டு நீதியரசர் பதவிகளை உடனடியாக நிரப்பியிருக்க வேண்டும்.

மேல் நீதிமன்றங்களில் இருக்க வேண்டிய 110 நீதிபதிகளில் 93 பேர் மட்டுமே உள்ள நிலையில், அவ்வெற்றிடங்களை அரசியலமைப்புக்கு அமைவாக விரைவாக நிரப்பாமல், பதவியில் இருக்கும் நீதிபதிகளின் வயதை நீடிப்பது கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் பதவி உயர்வு வாய்ப்புகளையும் கடுமையாகப் பாதிக்கும்.

அதனைவிடவும் மிகவும் ஆபத்தான விடயம் யாதெனில், வயதெல்லை அதிகரிப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் அந்த அரசியலமைப்புத் திருத்தத்தை ஒருவர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தினால், நீதிபதிகள் தங்களின் சொந்த ஓய்வுபெறும் வயதெல்லையைத் தாமே தீர்மானிக்க வேண்டிய ஒரு பாரதூரமான முரண்நிலை விருப்புக்கு (Conflict of Interest) தள்ளப்படுவார்கள்.

வழக்கை விசாரிக்கும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

தொடர்ச்சி: பக்கம் 17




பா.அரியநேத்திரன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் உற்பத்திக்காக மூன்று இலட்சம் எருமை, பசு மாடுகளை வளர்க்கும் தரைகள் என்பது மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடை வளர்ப்புக்கு அடிப்படையான பாரம்பரிய நிலங்களாகும். இதில் மிக முக்கியமானவை மயிலத்தமடு மற்றும் மாதவணை மேச்சல் தரைகளாகும். இப்பகுதிகள் நீண்டகால நில அபகரிப்பு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றன.

பல போராட்டங்கள் பல வருடங்களாக இடம்பெற்றும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை. ஆனால் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நிக்கவெரட்டிய விலங்கு வளர்ப்புப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக மேலும் 1,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் நாளாந்தப் பால் தேவையில் 43% மாத்திரமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின் அடிப்படையில் இந்த தகவல் வெளியாகியுள்ளதாக கடந்த (24/07/2026) பாராளுமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, வருடாந்த பால் உற்பத்தியை 410 மில்லியன் லீற்றரிலிருந்து 1,200 மில்லியன் லீற்றராக அதிகரிப்பதற்காக இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவையான உயர்தர இன பசுக்களை உருவாக்கும் ஒரு மையப் பண்ணையாக நிக்கவெரட்டிய பண்ணையை மாற்றுவதற்கு எதிர் பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

நிக்கவெரட்டிய பால் பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேலும் பல செயற்றிட்டங்கள் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் (கால்நடை திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்) பணிப்பாளரான வைத்தியர் கே.எம்.எச். ஜி சரத் பிரியந்த கடந்த 2023இல் இலங்கையில் மாவட்ட மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பாலின் அளவு பின்வருமாறு உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது

**மாவட்டம்/ மாகாணம்/உற்பத்தி(லீற்றர்)**

கொழும்பு 6,325,833
கம்பஹா 17,106,742
களுத்துறை 10,891,098
மேல் மாகாணம் மொத்தம் :34,323,673

கண்டி 10,638,940
மாத்தளை 10,571,598
நுவரெலியா 53,828,234
மத்திய மாகாணம் மொத்தம் :75,039,067

காலி 8,424,978
மாத்தறை 5,031,282
ஹம்பாந்தோட்டை 15,190,860
தென் மாகாணம் மொத்தம் :28,647,120

யாழ்ப்பாணம் 17,044,922
கிளிநொச்சி 5,852,921
மன்னார் 1,974,909
வவுனியா 13,321,132
முல்லைத்தீவு 6,927,892
வட மாகாணம் மொத்தம் :45,121,776

மட்டக்களப்பு 5,176,627
திருகோணமலை 9,027,214
அம்பாறை 12,862,342
கிழக்கு மாகாணம் மொத்தம் :27,062,183

குருநாகல் 43,565,746
புத்தளம் 13,518,207
வடமேல் மாகாணம் மொத்தம் :57,083,953

அனுராதபுரம் 51,128,081
பொலன்னறுவை 14,365,485
வடமத்திய மாகாணம் மொத்தம் .65,493,566

பதுளை 19,605,339
மொனறாகலை 11,699,543
ஊவா மாகாணம் மொத்தம் :31,304,882

இரத்தினபுரி 37,71,625
கேகாலை 2,476,037
சப்ரகமுவ மாகாணம் மொத்தம்:6,247,662

வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை வடமாகாணத்தில் 45,121,776, லீட்டரும், கிழக்கு மாகாணத்தில் 27,062,183,லீட்டரும் கிடைக்கிறது. ஏனைய மாகாணங்களை விட வடக்கு கிழக்கு இரண்டு மாகாணங்களிலும் காலநிலை புவியல் அமைப்புகளுடன் ஒப்பிட்டு நோக்கினால் கறவை பசுக்களை வீட்டில் கட்டி வளர்பதுடன் மேச்சல் தரைகளில் விட்டு வளர்க்கும் பாரம்பரிய நடைமுறையே வழக்கமாக பேணப்பட்டு வருகிறது. எருமை மாடுகள் வீட்டில் கட்டிவளர்க்கமுடியாது என்பதும் உண்மை,



இதில் கிழக்கு மாகாணத்தில் முள்ளிவாய்க்காலில் 2009, மே,18, ல் போர் மௌனித்தபின்னர் கடந்த 17, வருடங்களாக மாடுகள் மேயும் மேச்சல் தரைகளை திட்டமிட்டு வெளிமாவட்ட சிங்களமக்கள் அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்வதால் மாடுகளை மேச்சல் தரைகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை தொடர்கிறது.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ காலம் தொடக்கம் மைத்திரி, கோட்டா, ரணில், தற்போது அநுர ஆகிய நான்கு ஜனாதிபதிகள் ஆட்சி காலம் வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் மேச்சல் தரைக்கான நீதி கிடைக்கவில்லை. தொடர் போராட்டமே இடம்பெறுகிறது.

காலத்துக்காலம் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்களில் மேச்சல் தரை தொடர்பாக வலியுறுத்தப்படும், தொடர் போராட்டங்கள் இடம்பெற்றும் எந்த பலனும் இல்லை. ஒவ்வொரு கதைகளை கூறி பண்ணையாளர்களை ஏமாற்றுவதையே காணலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2026, மே,20, ம் திகதி ஜனாதிபதி அநுர கலந்துகொண்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் நீண்டகால பிரச்சினையாக இருந்துவரும் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக்காக, 1570 ஏக்கர் காணியினை விடுவிக்குமாறு மகாவலி அதிகார சபைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். 1570 ஏக்கர் என்பது முழுமையான தீர்வாக அமையாது இருந்தபோதும் முதல் கட்டமாக அதனை பெறுவதற்கு பண்ணையாளர்கள் சம் மதித்தனர்.

ஜனாதிபதி பணிப்புரை விடுத்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அந்த காணிகள் உத்தியோகபூர்வமாக சட்டரீதியாக வர்தமானி அறிவிப்புமூலமாக விடுவிக்கப்படவில்லை அதைவிட அப்பகுதியில் பண்ணையாளர்கள் பல இன்னல்களை தொடர்ச்சியாக இப்போதும் எதிர்கொண்டு வருகின்றனர். பண்ணையாளர்களையும், மாடுகளையும் இலக்குவைத்து வெளிமாவட்டத்தை சேர்ந்த சிங்களவர்கள் அச்சுறுத்தல் கொடுத்தவண்ணமே உள்ளனர்.

மேய்ச்சல் தரைகள் அத்துமீறிய வெளிமாவட்ட சிங்களவர்களால் உழவு செய்யப்பட்டு விவசாயப் பயிர்கள் செய்யப்படுகின்றன. வெளி மாவட்டங்களிலிருந்து வரும் சிங்கள நபர்கள் பண்ணையாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதால் பதற்றமான சூழ்நிலை கள் நிலவுகின்றன.

இது தொடர்பாக அப்பகுதியில் உள்ள கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் பண்ணையாளர்களின் முறைப்பாடுகளை ஏற்க பொலிசார் மறுப்பதாகவும் பண்ணையாளர்களால் கூறப்படுகின்றது.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மேச்சல் தரைகளை அபகரித்து அங்கு திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள பிரதிநித்துவத்தை உறுதி செய்யவே மாறி மாறி ஆட்சிசெய்த அரசாங்கங்கள் முனைப்பு காட்டி வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள்தான் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். மயிலத்தமடு மற்றும் மாதவணை பிரச்னை என்பது இன்று நேற்று நடக்கும் பிரச்னை அல்ல. இது பல ஆண்டுகளாக இந்த மக்கள் எதிர்கொண்டிருக்கின்றனர்.

கடந்த 2024, தொடக்கம்,2026, இரண்டு வருடங்களைக்குள் சுமார் 2000 மாடுகள் அங்கு கொல்லப்பட்டிருக்கின்றன. வாய்க்கு வெடி வைத்தும், மின்சார வேலிகளில் தாக்கப்பட்டும், ஆயுதங்களால் வெட்டியும் இந்த மாடுகள் கொலை செய்யப்பட்டிருக்கின்றன. மயிலத்தமடு பண்ணையாளர்கள் கோடிக்கணக்கான ரூபாய் வருமானத்தை இழந்துள்ளனர்.

வாழ்வாதார்ததை இழக்கக்கூடிய இடத்திற்கு இவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். பல நீதிமன்ற உத்தரவுகள் இந்த மக்களுக்கு சார்பாக வந்தபோதிலும், நீதிமன்ற உத்தரவுகளைக் கூடப் பொருட்படுத்தப்படுவதில்லை.

இந்தப் பிரச்னைக்கு பல தொடர்போராட்டங்களை மேற்கொண்டும் இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை. இந்த மக்கள் காலப்போக்கில் தங்களுடைய பொருளாதாரத்தை இழந்து இந்த இடத்தை விட்டுப் போகக்கூடிய ஒரு நிழல் யுத்தத்தை இந்த அரசு இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கின்றது,

நிக்கவெரட்டிய பால் பண்ணைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் அநுர அரசு குறைந்தபட்சம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் உற்பத்திக்கு மூல காரணமாக உள்ள மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரைகளில் அத்துமீறிய பயிர்செய்கை, குடியேற்றங்களை நிறுத்தி பூரணமாக மாடுகள் மேய்வதற்கான நிலமாக அதனை மாற்ற வேண்டும் என்பதே பண்ணையாளர்களுடைய எதிர்பார்ப்பு.

• • •




தீபச்செல்வன்

உலகில் ஒடுக்குமுறைகள் எங்கு நடந்தாலும் அவைகளுக்கு ஒரே முகம்தான். இதற்கு உலகின் பல ஒடுக்குமுறைகள் சாட்சியம் ஆகின்றன. நம் வரலாறு முழுவதும் குருதியினால் நனைந்தது என்கிறோம். உலகில் அதிகாரத்தின் எல்லா வரலாறுகளும் அப்படித்தான் இருக்கின்றன. உலகின் திசைகளில் ஒடுக்கப்படுகிற தேசங்களும் மக்களும் அப்படித்தான் கையாளப்படுகின்றனர். அப்படி உலகில் நடந்தவொரு படுகொலை எங்கள் தேசத்தில் நடந்தவொரு படுகொலையுடன் படுகொலையை நிகழ்த்திய நாட்டவர் ஒருவராலேயே ஒப்பிடப்பட்ட வரலாறும் இருக்கிறது. அத்தகைய நினைவையே இப் பத்தி ஆராய்கிறது.

### மை லாய் படுகொலை

வியட்நாமில் அமெரிக்க இராணுவம் 1968 மார்ச் 16 அன்று மை லாய் (My Lai) என்ற கிராமத்தில் நிகழ்த்திய படுகொலை உலக வரலாற்றில் மனிதகுலத்தின் மனச்சாட்சியை உலுக்கிய ஒரு குற்றம். ஆயுதமற்ற நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எனப் பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். பாலியல் வன்முறைகள் நிகழ்ந்தன. வீடுகள் எரிக்கப்பட்டன. கால்நடைகள் சுட்டுக் கொல்லப்பட்டன. கண்களால் வியட்நாமிய மக்கள் என்ற ஒரே பார்வையுடன் நிகழ்த்தப்பட்ட அப் படுகொலையின் நாள், போரின் பெயரில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளின் அடையாளமானது.



அமெரிக்கா பல ஆண்டுகள் அந்த உண்மையை மறைக்க முயன்றது. ஆனால் உயிர் தப்பியவர்களின் சாட்சிகளும், புகைப்படங்களும், பத்திரிகையாளர்களின் விசாரணைகளும், சில இராணுவ வீரர்களின் மனச்சாட்சியும் அந்த மறைப்பை உடைத்தன. ‘மை லாய்’ என்ற பெயர் ஒரு கிராமத்தின் பெயராக மாத்திரமின்றி, ஆயுத வன்முறை தனது எல்லையைத் தாண்டிய கொடும் தருணத்தின் உலகச் சின்னமாகவும் உலக மக்களால் நினைவுகொள்ளப்படுகிறது.

### ஈழத்தில் படுகொலைகள்

ஈழத் தமிழர்களின் வரலாற்றிலும் அத்தகைய பல படுகொலைகளின் நினைவுகளுள்ளன. குமுதினிப் படகுப் படுகொலை, கிழக்கின் சத்துருக்கொண்டான், நவாலி தேவாலயம், கிருஷாந்திப் படுகொலை, முள்ளிவாய்க்கால் படுகொலை, செம்மணி என்று நீளும் வரிசையில் மறக்க முடியாத ஒரு பெயர் வல்வெட்டித்துறை. 1989 ஆகஸ்ட் மாதத்தின் முதல் நாட்களில் வல்வெட்டித்துறை இரத்தத்தில் மூழ்கியது. அன்றைய பொழுதுகளில், தங்கள் வீடுகளில் வாழ்ந்த பொதுமக்கள். தாய்மார்கள், குழந்தைகள், முதியவர்கள், மீனவர்கள், கடைக்காரர்கள், மாணவர்கள். அவர்கள் வாழ்ந்த வீடுகளே அவர்களுக்குக் கல்லறைகளாக மாறின.

1987 ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானபோது, இந்திய அமைதிப்படை தமிழர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் சக்தியாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் மிகக் குறுகிய காலத்திலேயே அந்த ‘அமைதிப்படை’ தமிழர் வாழ்விடங்களில் போர்ப் படையாக மாறியது. விடுதலைப் புலிகளுடனான மோதல் விரைவில் தமிழர் குடியிருப்புகளின் மீதான தாக்குதல்களாக விரிந்தது. வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தனர். காணாமல் ஆக்கப்பட்டனர். பாலியல் வன்முறைகளும், சித்திரவதைகளும், தன்னிச்சையான கைது நடவடிக்கைகளும் பரவலாக நடந்தன.

### மக்களை பலியெடுத்த அமைதிப்படை

அந்தப்பின்னணியில்தான்வல்வெட்டித்துறைப்படுகொலை நிகழ்ந்தது. ஒரு தாக்குதலில் இந்திய அமைதிப்படை வீரர்கள் உயிரிழந்ததற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக முழு ஊரே தண்டிக்கப்பட்டதாக உயிர் தப்பியவர்களின் சாட்சிகள் கூறுகின்றன. வீடுகள் முற்றுகையிடப்பட்டன. மக்கள் வெளியே வருமாறு கட்டளையிடப்பட்டனர். சிலர் வீடுகளுக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. வணிக நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை ஒரே இரவில் இழந்தன.

எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்ற எண்ணிக்கையில் ஆதாரங்களுக்கு இடையே வேறுபாடுகள் இருந்தாலும், அது ஒரு சிறிய இராணுவ மோதல் அல்ல என்பது மறுக்க முடியாத உண்மை. அது ஒரு பொதுமக்கள் மீதான கூட்டுப் படுகொலை. ஒரு நகரத்தின் மீது இறக்கிவிடப்பட்ட வன்முறை. வல்வெட்டித்துறையை நினைவுகூரும் மக்கள் இன்னும் சொல்லும் கதைகள் படுகொலை வரலாற்றின் கணக்கெடுப்புகளால் அளவிட முடியாதவை. குழந்தைகளை இழந்த தாய்மார்கள். கணவனைத் தேடி இன்னமும் திரும்பாத பெண்கள். சாம்பலான வீடுகளின் முன் நின்ற முதியவர்கள். சிதைந்த தெருக்கள். எரிந்த வாசல்கள். துப்பாக்கிச் சத்தம் அடங்கிய பிறகும் பல ஆண்டுகள் அந்த ஊர் அமைதியை மீட்டெடுக்கவே முடியவில்லை.

### மைலாய் ஏன் நினைவுகொள்ளப்படுகிறது?

மை லாய் உலகம் முழுவதும் நினைவுகூரப்படுவதற்கு காரணம் அங்கு உயிர்கள் பறிக்கப்பட்டதாலேயல்ல. அந்தக் குற்றம் மறக்கப்படக்கூடாது என்ற உலக மனச்சாட்சியே காரணம். ஆனால் வல்வெட்டித்துறையின் நினைவு உலக அரசியலின் வசதிக்காக ஒதுக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட ஒரு நினைவாகவே இருந்து வருகிறது. இந்தியா தனது வெளிநாட்டு அரசியலில் ஜனநாயகம், மனித உரிமைகள், சர்வதேச சட்டம் குறித்து தொடர்ந்து பேசுகிறது. ஆனால் இலங்கையில் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து முழுமையான அரசியல் சுயவிமர்சனமோ, பொது மன்னிப்போ, சுயாதீனமான உண்மை வெளிப்படுத்தலோ இதுவரை நிகழவில்லை. வரலாற்றை மறைப்பதால் பொறுப்பு அழியாது என்பது மிகப் பெரும் உண்மையல்லவா?




ஒரு நாட்டின் பெருமை அதன் தவறுகளை மறைப்பதில் இருப்பதில்லை. அவற்றை ஏற்றுக்கொண்டு நீதியை நோக்கிச் செல்லும் தைரியத்தில்தான் உள்ளது. மை லாய் சம்பவம் குறித்து அமெரிக்காவுக்குள் கூட கடுமையான விவாதங்கள் நடைபெற்றன. பத்திரிகையாளர்கள் விசாரித்தனர். ஆவணங்கள் வெளியானது. உலகம் கேள்வி எழுப்பியது. அந்த விவாதங்களே வரலாற்றை உயிரோடு காப்பாற்றியது. ஆனால் வல்வெட்டித்துறை குறித்து இந்தியச் சமூகத்தின் நினைவில் இன்னும் ஆழமான அமைதி நிலவுகிறது. அந்த அமைதி, உண்மையை அறியாத அமைதியா? அல்லது அறிந்தும் பேச மறுக்கும் அமைதியா?

### இந்தியாவில் மை லாய்

இந்தியப் பாதுகாப்பு அமைச்சராகப் பின்னர் பணியாற்றிய ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், வல்வெட்டித்துறைப் படுகொலையை இந்தியாவின் மை லாய் என வர்ணித்தார். இதுவொரு வரலாற்று முக்கியத்துவமான ஒப்புதல் வாக்குமூலமாகும். போரில் பொதுமக்களைப் பாதுகாப்பது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படை. பழிவாங்கும் பெயரில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது, சொத்துகளை அழிப்பது, அச்சத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவது எந்த இராணுவத்திற்கும் நியாயப்படுத்த முடியாத செயல் என்பதை இதன்வழி உணர முடிகிறது.

உலகம் மை லாயை மறக்கக் கூடாது என்று சொல்வது போலவே தமிழர்களும் வல்வெட்டித்துறையை மறக்க முடியாது. மறக்கவும் கூடாது. நமது நினைவுகூர்தல்கள் யாவும் உண்மை மறைக்கப்படாதிருக்க வேண்டும் என்பதற்காகவே நிகழ்த்தப்படுகிறது. நீதியின்றி நினைவுகள் அமைதியடைவதில்லை பொறுப்புக் கூறுதலும் உண்மையை ஏற்றுக்கொள்ளுதலும் போரில் அறம் பிழைத்த அனைவரும் நிறைவேற்ற வேண்டிய அவசிய கடமையாகும். வல்வெட்டித்துறை இன்னும் அந்த உண்மைக்காகவும், அந்த நீதிக்காகவும் காத்திருக்கிறது

• • •



# தொடர்ந்து அழிக்கப்பட்டு வரும் தமிழர்களின் பண்பாட்டு மரபுகள்!

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பில் ஆராயவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் பொருளாதாரம் மற்றும் கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை சிதைக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக்காலமாக பல்வேறு அவதானிப்புகளை செலுத்திவருகின்றோம்.

குறிப்பாக யுத்ததிற்கு பின்னரான காலப்பகுதியென்பது கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பல்வேறு விடயங்களில் சுரண்டப்படும், தமிழர்களின் பண்பாட்டு கலாசாரங்களை அழிக்கும் செயற்பாடுகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றுவருவதுடன் பொருளாதார விழுமியங்களும் அழிக்கப்படும் நிலைமையே இருந்துவந்தது.

குறிப்பாக கிழக்கில் நுண்கடன் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்து அதன்மூலம் பல குடும்பங்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக்கப்பட்டதுடன் அதனால் தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களும் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. இது வெறுமனே ஒரு நுண்கடன் திட்டமாக மட்டும் கடந்துசெல்லமுடியாத வகையில் இதன் செயற்பாடுகள் இருந்துவருகின்றன.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் மூன்று இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழும் பகுதியாக இருக்கின்றபோதிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை மட்டுமே இலக்காக கொண்டு இந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டிழுப்புக்கும் நோக்கில் அறிமுகப் படுத்தப்பட்ட நுண்கடன் திட்டங்கள், இன்று அப்பகுதி வாழ் தமிழ் மக்களின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் ஒரு பெரும் காரணியாக உருவெடுத்துள்ளன. வறுமை ஒழிப்பு மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடு என்ற பெயரில் நுழைந்த இத்திட்டங்கள், முறையான கண்காணிப்பின்மையாலும் அதிக வட்டி வீதங்களாலும் எளிய மக்களைக் கடன்பாடுகளுக்குள் தள்ளி வருகின்றன.

முப்பதாண்டு கால யுத்தத்தால் கிழக்கிலங்கையின் தமிழ் சமூகத்தின் வாழ்வாதார ஆதாரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக போரின் வடுக்களால் வாழ்வாதாரத்தை இழந்து தவித்த பெண்கள் பாரம்பரிய வங்கிகளில் பிணையங்கள் இன்றி கடன் பெற முடியாத சூழல். இத்தகைய வறுமைச் சூழலையும் அவசியத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பல தனியார் நுண்கடன் நிறுவனங்கள், எளிய நடைமுறைகள் மூலம் கடன்களை வழங்கி கிராமப்புறங்களை நோக்கிப் படையெடுத்தன.

ஆரம்பத்தில் வாழ்வாதார மீட்சிக்கு உதவும் வளர்ச்சி நடவடிக்கையாகத் தோற்றமளித்த இந்த நுண்கடன் முறைமை, விரைவிலேயே ஒரு திட்டமிட்ட பொருளாதாரச் சுரண்டலாக உருவெடுத்தது. பல தனியார் நிறுவனங்கள் ஆண்டிற்கு 30வீதம் முதல் 100வீதம் வரையிலான மிக அதிகமான வட்டியை மறைமுகக் கட்டணங்களுடன் வசூலிக்கத் தொடங்கின. போதிய நிதி அறியாமையோ, முறையான தொழிற்பயிற்சியோ அல்லது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகளோ இன்றி வழங்கப்படும் பணத்தால், மக்களால் வருமானத்தை ஈட்டி கடனைச் செலுத்த முடியாமல் போகிறது. இதனால், ஒரு நிறுவனத்தின் கடனை அடைக்க மற்றொரு நிறுவனத்திடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கும் அபாயகரமான சங்கிலித் தொடர் கடன் வலைக்குள் மக்கள் தள்ளப்படுகிறார்கள்.

இந்த நுண்கடன் சீரழிவால் கிழக்கு மாகாண தமிழ் சமூகத்தின் தனிநபர் வாழ்வியலிலும் குடும்ப அமைப்பிலும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. கடன் வசூலிப்பாளர்களின் கட்டுப்பாடற்ற அவமதிப்புகள், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களால் குடும்பங்களுக்குள் நாளாந்தம் மனக்கசப்புகளும் விவாகரத்துகளும் அதிகரித்துள்ளன. கடன் சுமையால் ஏற்படும் தீவிர மன உளைச்சல் காரணமாகப் பலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் சோகமான சூழலும் உருவானது. அத்துடன், கடனை அடைப்பதற்காகத் தமது பாரம்பரிய நிலங்கள், குடும்ப நகைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்று நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு பல குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

இதேபோன்று இன்றைய நிலையில் மற்றுமொரு பாரிய சுரண்டல் அல்லது கிழக்கு தமிழ் மக்களை இலக்குவைத்து பிளான்டேசன் திட்டம் என்ற வகையில் பாரிய நிதி தொடர்பில் சுரண்டல்களை முன்னெடுக்கும் வகையில் நடுத்தர குடும்பங்களை இலக்குவைத்து தற்போது பல நிறுவனங்கள் களமிறக்கப்பட்டுவருவதை காணமுடிகின்றது.

கிழக்கு நுண்கடன் வலையினால் ஏழைக் குடும்பங்கள் சீரழிந்ததைத் தொடர்ந்து, தற்போது அதன் அடுத்த கட்டமாக “பிளான்டேசன் நிதித் திட்டங்கள்” அல்லது பெருந்தோட்ட காணி மற்றும் மர முதலீட்டு திட்டங்கள் என்ற பெயரில் ஒரு புதிய பொருளாதார அச்சுறுத்தல் உருவெடுத்துள்ளது. குறிப்பாக, கிழக்கிலுள்ள நடுத்தர வர்க்கத் தமிழ் குடும்பங்களை இலக்காகக் கொண்டு பரப்பப்படும் இத்திட்டங்கள், சாத்தியமற்ற கவர்ச்சிகரமான லாபங்களை வாக்குறுதியாக அளித்து, மக்களின் ஆயுட்கால சேமிப்புகளைக் சூறையாடும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளன.

இத்திட்டங்கள் வழக்கமான வங்கி முதலீடுகளைப் போலன்றி, விவசாயம் அல்லது விலையுயர்ந்த மரச் செய்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. தேக்கு, சந்தனம், மகோகனி போன்ற பயன்பாட்டு மரங்கள் அல்லது மா, கொய்யா, தேங்காய் போன்ற பெருந்தோட்டப் பயிர்களில் குறிப்பிட்ட தொகையை முதலீடு செய்தால், குறுகிய காலத்தில் அல்லது சில ஆண்டுகளில் பல மடங்கு லாபம் தருவதாக இந்நிறுவனங்கள் விளம்பரப் படுத்துகின்றன. குறிப்பாக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், வெளிநாட்டுச் சம்பாத்தியத்தை நம்பியிருக்கும் குடும்பங்கள் மற்றும் சிறு வணிகர்களே இவர்களின் முதன்மை இலக்காக உள்ளனர். வங்கிகளில் கிடைக்கும் நியாயமான வட்டி வீதங்களை விட பல மடங்கு அதிக லாபம் கிடைக்கும் என்ற ஆசையைத் தூண்டுவதே இவர்களின் பிரதான ஈர்ப்பு காரணியாக அமைகிறது.

ஏழை எளிய மக்கள் நுண்கடன்களில் சிக்கிச் சின்னப்பின்னமானது போல, நடுத்தரக் குடும்பங்கள் தமது சேமிப்புகளை இழந்து நடுத்தெருவிற்கு வரும் அபாயம் இத்திட்டங்களில் மறைந்துள்ளது. மக்கள் தங்களின் ஓய்வூதியப் பணம், அவசர கால சேமிப்பு மற்றும் நகைகளை அடகு வைத்துப் பெறும் பணத்தை இத்தகைய திட்டங்களில் முதலீடு செய்கிறார்கள். இருப்பினும், இத்தகைய பெரும்பாலான நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரமோ அல்லது முறையான சட்டரீதியான கட்டுப்பாடோ இன்றி இயங்குவதால், நிறுவனம் நஷ்டமடைந்தாலோ அல்லது மூடப்பட்டாலோ முதலீட்டாளர்களால் தங்களது பணத்தை மீட்க முடியாது.

மேலும், மரங்கள் வளர்ந்து பலன் தர பல ஆண்டுகள் ஆகும் என்பதால், முதலீடு செய்த பணத்தை இடைநடுவில் பெற முடியாமல் மக்கள் முடங்கிப்போகின்றனர். தொடக்கத்தில் புதிய முதலீட்டாளர்களின் பணத்தைக் கொண்டு பழைய முதலீட்டாளர்களுக்கு லாபம் கொடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தி, இறுதியில் மொத்தமாக மூடிவிட்டு ஓடும் நிலையே ஏற்படப்போகின்றது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இத்தகைய திட்டங்கள் மேலும் பல தீவிர சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளமாகவும் நுகர்வுச் சக்தியாகவும் விளங்கும் நடுத்தர வர்க்கத்தின் சேமிப்பு அழிவது, ஒட்டுமொத்த பிராந்தியப் பொருளாதாரத்தையும் ஸ்தம்பிக்க வைக்கும். இவ்வாறான முதலீட்டு ஏமாற்றங்களால் ஏற்படும் நிதி இழப்புகள், குடும்பங்களுக்குள் கடுமையான மனக்கசப்புகளையும், தீவிர மன அழுத்தத்தையும், தற்கொலை எண்ணங்களையும் தோற்றுவிக்கின்றன. அதுமட்டுமன்றி, அதிக லாப ஆசையில் தமக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் வீடுகளை அடமானம் வைத்து முதலீடு செய்து, இறுதியில் தங்குவதற்கு வீடும் இன்றி சொத்துக்களை இழக்கும் சோகமான சூழலும் ஏற்படுகிறது.



இந்த நிலைமைகள் குறிப்பாக கிழக்கில் உள்ள தமிழ் பகுதிகளை மட்டுமே இலக்குவைத்து முன்னெடுக்கப்படுகின்றன.இந்த நிதிநிறுவனங்களில் கடமையாற்றுவதற்காக தெரிவுசெய்யப்படும் இளைஞர் யுவதிகளும் போதிய கல்வி திறமையினைப்பெற்றிருக்காதவர்களாக இருக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.குறிப்பாக இந்த நிதிநிறுவனங்களில் அதிகளவில் தமிழர்களே தொழில் வாய்ப்புகளுக்காகவும் தெரிவுசெய்யப்படும் நிலைமையும் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை தடுப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

தங்களுக்குள்ள அதிகாரங்கள் மூலம் மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படாத இவ்வாறான நிதிநிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் உள்ளூராட்சிமன்றங்களுக்கு உள்ளது. களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் தவிசாளரினால் இது தொடர்பான நடவடிக்கைகள் கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்

தொடர்ச்சி: பக்கம் 16




அரச வேலைதா அல்லது அரச காணிகளை உற்பத்தி மையங்களாக மாற்றி வேலைவாய்ப்பை உருவாக்கும் புதிய முன்மொழிவு யாழ்ப்பாணம், 25.07.2026




கடந்த ஏழு ஆண்டுகளாக நிரந்தரமான, பாதுகாப்பான மற்றும் நிலையான வேலைவாய்ப்பைக் கோரி பல்வேறு ஜனநாயக வழிமுறைகளில் தமது கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற வடமாகாண வேலையில்லா பட்டதாரிகள், இன்று புதிய சிந்தனையுடனும் ஆக்கபூர்வமான அணுகுமுறையுடனும் மாற்று வேலைவாய்ப்பு மாதிரியை முன்வைத்துள்ளனர்.

இலங்கை நில அளவைத் துறையின் புள்ளிவிவரங்களின்படி, நாட்டில் சுமார் 17% (1,51,028 ஹெக்டேர்) அரச காணிகள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளன. இந்தக் காணிகளை நீண்டகால அடிப்படையில் பட்டதாரிகளுக்கு வழங்கி, ஒருங்கிணைந்த உற்பத்தி மையங் களை உருவாக்க வேண்டும் என பட்டதாரிகள் முன்மொழிகின்றனர்.



சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட "படித்த வாலிபர் திட்டம்" போன்று, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், மதிப்புக்கூட்டல் தொழில்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ளிட்ட துறைகளை ஒருங்கிணைத்து சமூக தொழில் முனைவுத் திட்டங்களை உருவாக்குவதே இந்த முன்மொழிவின் நோக்கமாகும்.

இந்தத் திட்டம் வெற்றியடைய திறன் பயிற்சி, தொழில்நுட்ப வழிகாட்டுதல், நிறுவன ஆதரவு, வட்டி இல்லா அல்லது குறைந்த வட்டிக் கடன் வசதி, உபகரண உதவி, காப்பீடு, சந்தை இணைப்பு, மதிப்புக்கூட்டல், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு, விளைவு மதிப்பீடு ஆகியவை அரசால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வடமாகாணத்தில் பட்டதாரிகள் கூட்டுறவு அமைப்பை உருவாக்கி, தன்னிறைவு பொருளாதார கட்டமைப்பையும் நிலையான சமூக தொழில் முனைவு சூழலையும் உருவாக்கும் நோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

இந்த முன்மொழிவின் மூலம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாகுவதோடு, வருமான உயர்வு, வறுமை ஒழிப்பு, உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி போன்ற நீண்டகால பயன்கள் ஏற்படும் என சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



இந்த புதிய சிந்தனையை அரசின் கவனத்திற்கும் பொதுமக்களின் பார்வைக்கும் கொண்டு செல்வதற்காகவும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், ஆரம்பகட்ட நிதி திரட்டும் முயற்சியாகவும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக பட்டதாரிகள் வாகனங்களை கழுவும் சமூகப் பங்களிப்பு செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

இந்த முயற்சி வெற்றியடைந்தால், வடமாகாணத்தில் பட்டதாரிகள் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கி, சமூக தொழில் முனைவு மற்றும் உற்பத்தி அடிப்படையிலான புதிய பொருளாதார மாதிரியை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், முதலீட்டாளர்கள், புலம்பெயர் தமிழர் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சமூக அக்கறையுள்ள நன்கொடையாளர்கள் ஆகியோர் நிதி, தொழில்நுட்பம், கைவிடப்பட்ட அல்லது பயன்பாட்டில் இல்லாத காணிகள் உள்ளிட்ட ஆதரவுகளை வழங்கினால், இந்தத் திட்டம் வடமாகாணத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான முன்னோடி முயற்சியாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அரசாங்கத்தால் அனைவருக்கும் அரச வேலைவாய்ப்பை வழங்க இயலாத சூழ லில், பட்டதாரிகளை உற்பத்தியாளர்களாகவும் தொழில் முனைவோர்களாகவும் மாற்றும் இந்த மாற்று அணுகுமுறையை நடைமுறைப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வடமாகாண பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் வலியுறுத்தினார்.

**தொடர்புக்கு: 077 353 9992**

**முகநூல்: Northern Graduates**




காற்று கொஞ்சம் வேகமாகவே வீசியது, ஜன்னலோர இருக்கை ஒன்றில் தன்னை மறந்து சாய்ந்திருந்தாள் வெண்ணிலா. கண்கள் இரண்டும் எரிவு கண்டிருந்தது. கண்ணோரங்களில் கண்ணீர் வழிந்து, காய்ந்து போய் இருந்தது. கையை வைத்துப் பார்த்தபோது, கன்னத்தின் மென்மை போய், சொரசொரப்பான ஒரு தோல் தான் தட்டுப்பட்டது.

உச்சந்தலையில் யாரோ, உளி கொண்டு அடிப்பது போல, தலை விண் விண்ணென்று தெறித்தது. நரம்புகளுக்கிடையே, அமிலம் ஊற்றியது போல, அப்படி ஒரு வலி, இந்த வலிகள், அவளுக்கு பழகிப்போனவை தான் என்றாலும் திரும்பத் திரும்ப உயிரை நொறுக்குகிற இந்த வலியை அவளால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை, ஒன்று இரண்டா, அவளைப் புரட்டி எடுத்த சம்பவங்கள்.



திருமணம் என்ற பெயரில் தானே தனக்கு வைத்துக்கொண்ட எரி நெருப்பு அவளைக் கொஞ்சம், கொஞ்சமாய் தின்று கொண்டு தானே இருக்கிறது, இதை எல்லாம் தாங்க இயலாதென்று ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்து விடலாம் என்றாலோ, அவளுடைய கையைப் பற்றிக் கொண்டிருக்கிற, இரண்டு பிள்ளைகளையும் தனியே தவிக்க விட்டுவிட்டு அவளால் நிம்மதியாக சாகக் கூட முடியாதே, ஒரு தைரியமான பெண்ணாக தன்னைக் காட்டிக் கொள்வதில், எவ்வளவு உறுதியாக நின்றாலும் அடிக்கு மேல் அடிவிழுந்து, அவளை உடைத்து நொறுக்கி விடுகிறதே வாழ்க்கை. கலியாணம் செய்து, கணவனோடு போன பொழுது, வாழ்க்கை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் ஒரு வருடம் ஓடி முடிவதற்குள் கணவனுடைய போக்கே மாறிப்போய்விட்டது.

குடியும் கூத்துமாக இருந்தவனை, திருத்திவிடலாம் என்று நினைத்தது தான் அவள் செய்த பெரிய பிழை. அந்த நம்பிக்கையில், இரண்டு வருடங்களுக்கு ஒன்றாக ஆறு பிள்ளைகளைப் பெற்று விட்டாள், ஆனால் கணவனின் நிலைப்பாடோ மாறியதாக இல்லை, இயலாத கொடுமையில், கலியாண வாழ்க்கையும் வேண்டாம், கட்டிய கணவனும் வேண்டாம் " என்று நினைத்து அவள் அவனை விட்டு வந்தது ஒரு சாதாரண நாள் இல்லை, அது ஒரு கொடுமையான இரவு, நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது.

கறுப்பு இராட்சதனாக விரிந்திருந்த அந்த இரவில், பொழுது சாயும் பொழுதிலேயே நாய்களின் ஊளையும் ஏதோ ஒரு அலறல் சத்தமும் ஓயாமல் கேட்பது போல, காதுக்குள் ஒரு சத்தம் ஒலித்துக்கொண்டே இருந்தது. இதயம் வழமைக்கு மாறாக தடதடவென துடிப்பது போல இருந்தது.

கணவன் வீட்டுக்கு வரும் மாலைப் பொழுதுகள் எப்போதும் அச்சம் சூழ்ந்த ஒன்றாக இருப்பது இயல்பு தான் என்றாலும் இன்றைய மனத்தவிப்பு வித்தியாசமாக இருந்தது. சிங்கத்தைக் காணப்போகும் சிறு விலங்கு போல, ஒரு அச்சம் நிறைந்த மனது அவளை ஆக்கிரமித்திருந்தது. கடைசி மகன் பிறந்து எட்டு நாட்கள் தான் ஆகியிருந்தன. பிள்ளைப் பேறு பார்க்க என்று யாரும் இல்லை, சின்ன வயதிலேயே அம்மாவை இழந்தாச்சு, சொந்தங்கள் எல்லாம் வன்னியில் இருக்க, இவள் மட்டும் வவுனியாவில் வாழ்ந்து கொண்டிருந்தாள். கணவனின் உறவுகளோடு இவள், சேர்ந்து வாழ்ந்தாலும் அவர்கள் ஏனோ இவளை, தள்ளிவைத்தே பார்த்தனர்.

மாமியாருக்கு எப்பவும் தன்னுடைய பிள்ளைகளில் மட்டும் தான் கரிசனை. பிள்ளை பிறந்த போது, வைத்தியசாலைக்கு கூட வந்து மூன்று நாட்கள் பார்த்துக்கொண்டதோடு சரி, பிறகு, மகள் கர்ப்பிணி என்றும் சாப்பாடு குமட்டுதாம் என்றும் சொல்லிவிட்டு போனவாதான், வீட்டுப்பக்கம் வரவேயில்லை, பதின்நான்கு வயதான மூத்த மகள் சோறு காய்ச்ச, மகளை பிள்ளையின் அருகில் இருத்திவிட்டு சரக்கு தண்ணி வைத்து, பிள்ளையின் துணிகள் தோய்த்து என்று முக்கிய வேலைகளை தானேதான் செய்தாள்.

மற்றப் பிள்ளைகளுக்கும் தனக்கும் முட்டை பொரித்து, கருவாடு கறிவைத்து, என்று மூத்த மகள், அந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டாள். இரவு வீட்டுக்கு வருகிற கணவன், கடைச் சாப்பாடு கட்டிக்கொண்டு வந்து, பிள்ளைகளுக்கும் கொடுத்து, சாப்பிட்டு படுத்து விடுவதைக் காணும் போது, 'தன்னில் தான் அக்கறை இல்லை, பிள்ளைகள் மீது கொஞ்சம் கரிசனை இருக்கு, இது போதும் ' என்று மனதுக்குள் நினைத்துக் கொள்ளுவாள்.

அவள் வீட்டை விட்டு வெளிக்கிட்ட அன்றைய இரவில் தான் அவனுடைய சுயரூபம் முழுதாய் வெளிப்பட்டது. தன்னுடைய சினேகிதர்கள் என்று மூன்று பேரை கூடவே கூட்டி வந்து விட்டு, வீட்டுக்கு வெளியே இருக்க வைத்திருக்கவும், பிள்ளைகளோடு வெண்ணிலா வீட்டுக்குள்ளே இருந்தாள்.

வீடு என்றால், அது இரண்டு மூன்று அறைகளைக் கொண்டதோ, அகன்ற விறாந்தை கொண்டதோ இல்லை, கிடுகினால் வேயப்பட்ட ஒற்றை கொட்டில், ஒரே ஒரு அறை, முன்னுக்கு சின்ன விறாந்தை, அதிலே இரண்டு பக்கமும் மண் குந்து, இதுதான் அவர்களின் வீடு, வெளிய இருந்து கதைப்பது எல்லாம் உள்ள கேட்கும்.

*"என்ன சங்கர், எல்லாம் சொல்லிப்போட்டியோ?"*
*"அதண்ண, அது ஒண்டும் பிரச்சனை இல்லை, நான் சொன்னால் சொன்னதுதான்...."*
*"அப்ப இன்னும் விசயம் சொல்லைல்லையா?"*
*"கொஞ்சம் இருங்கோ அண்ண, நான் ஒருக்கா உள்ள போய் வந்தால் எல்லாம் சரி"*

சொல்லிக்கொண்டே எழுந்த கணவன் அவசரமாக உள்ளே வருவது வெண்ணிலாவுக்குத் தெரிந்தது. என்னவாக கருக்கும்' என்கிற கேள்வி, முள் வண்டின் குடைச்சலாக மூளைக்குள் ஓடியது. மூத்த மகளின் கழுத்தில் நூல் போல, ஒரு சின்ன பவுண் சங்கிலி கிடக்கு, வீட்டு வேலைக்கு போன இடத்தில, வெளிநாட்டில இருந்து வந்து நிண்ட அந்த

## கோபிகை

அம்மாவின்ர மருமகள் தந்திட்டுப் போனது, அதை அடைவு வைக்க கணவன் எவ்வளவோ முயற்சி செய்த போதும் வெண்ணிலா சம்மதிக்கவே இல்லை, ஒருமாதிரி ஒரு வருசமா அதை கவனமா வைச்சிருந்தாச்சு, அதுக்கு தான், ஆக்களையும் கூட்டி வந்து ஆள் திட்டம் போடுறார் போல, என்று நினைத்த உடனேயே, ' சீ..... என்ன மனுசன்.....' என்ற உணர்வு தான் வெளிப்பட்டது.



அவளுடைய சிந்தனைகள் முடிவதற்குள் அவளருகில் வந்து விட்ட கணவன், சற்றே தள்ளிப் படுத்திருந்த பிள்ளைகளைப் பார்த்து, "எல்லாரும் நித்திரையோ?" முகத்துக்கு கிட்ட வந்து கேட்ட விதத்தில் முகத்தில் அறைந்த சாராய மணம் வயிற்றைக் குமட்டியது இவளுக்கு.

சடாரென்று முகத்தை திருப்பிக் கொண்டு, "ஓம், சாப்பிட்டு படுத்திட்டுதுகள்...." சொல்லும் போது, மடியில் தாமரை மொட்டு போல, நூல் துணிச்சுருளுக்குள் கிடந்த கடைசி மகன், உடம்பை முறுக்கி மெல்லிய ஒலி எழுப்பினான்.

குழந்தையை மெல்ல அணைத்தபடி, நிமிர்ந்து கணவனின் முகத்தைப் பார்த்தாள். " இஞ்ச பார், நீ ஒரு விசயம் செய்ய வேணும்," பதில் கூறாமல் கணவனை உற்றுப் பார்த்தவளிடம் " உனக்கு தெரியும் தானே, வீட்டில சரியான கஸ்ரம், துரை அண்ண ஒரு பரல் காடி போட்டுத் தாறன் எண்டு சொன்னவர், நீ கொஞ்சநேரம் அவரோட இருக்கிறியோ?" கணவன் சொன்னதை, சரியாகப் புரிந்து கொள்ளாதவளாய் " என்ன..." என்றாள்.

**தொடரும்....**

## இஸ்ரேலின் இனப்படு... தொடர்ச்சி...

விநியோகஸ்தர்களுக்கு வழங்கியுள்ளன. சிவிலியன் பயன்பாட்டிற்காக (பொதுமக்கள் பயன்பாட்டிற்காக) அனுப்பப்பட்டிருக்கக்கூடிய சரக்குகளைத் தங்கள் ஆராய்ச்சியாளர்கள் "முறையாக விலக்கிவிட்டதாக" அந்த மனித உரிமை அமைப்பு கூறியது.

"காசாவில் நடைபெறும் இனப்படுகொலை பல ஆண்டுகளாக ஏறக்குறைய தினமும் உலகம் முழுவதும் ஒளிபரப்பப்பட்டு வரும் நிலையிலும், இஸ்ரேலிய ராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிப்பதை" தங்கள் அமைப் பின் அறிக்கை வெளிப்படுத்துவதாக அம்னஸ்டி இன்டர் நேஷனலின் பொதுச் செயலாளர் ஆக்னஸ் கல்லா மார்ட் கூறினார்.

# சிங்கள சோவினிசத்திலிருந்து தப்பிப்பிழைக்குமா சிங்கள தேசியம் ?

கலாநிதி. ஸ்ரீஞானேஸ்வரன்

தமிழ் மற்றும் சிங்கள தேசிய இனங்கள் தமக் குரிய தேசங்களில் தனித்தனி ஆட்சிகளை அமைத்திருந்த போதே இலங்கை காலனியாதிக்கத்திற்கு உட்பட்டது. எனினும் காலனியாதிக்கத்திலிருந்து இலங்கை விடுவிக்கப் பட்ட போது முன்னிருந்த வகையில் விடுவிக்கப்படாமல் சுதந்திர தேசங்களனைத்தையும் ஒன்றாக்கி ஒரே நாடாக "சிலோன்" உருவாக்கப்பட்டது.

இந்த நாட்டின் சுதந்திரத்தை எந்தத் தேசிய இனத்திடம் வழங்கவேண்டும் என்பதை பிரித்தானியாவும் மேற்குலகும் அன்றே தீர்மானித்திருத்தன. அவ்வாறு தீர்மானிப்பதை நவகாலனித்துவத்தின் கூறுகளில் ஒன்றாக நாம் கருத்திற்கொள்ளவேண்டும்.

அதாவது யாரிடம் சிலோனின் சுதந்திரத்தை வழங்கினால் என்றென்றைக்கும் அவர்கள் எமக்கு அடிமையாக இருப்பார்களோ அவர்களிடம் வழங்குவதே சிறந்தது என்று கணித்து வழங்கியது நவகாலனித்துவத்தி னைத் தொடரும் நடவடிக்கையாக அமைந்தது.

இலங்கை தொடர்பான நவகாலனித்துவ சிந்தனை யின் தோற்றப் புள்ளிகளுள் ஒன்றாக முதன்முதலில் ஒற்றைத் தன்மைகொண்ட நீதித்துறை அமைப்பை நிறுவக் காரணமான பரிந்துரைகளை முன்வைத்த சாள்ஸ் எச். கமரூன், "என்னை அடிக்கடி ஆட்கொண்ட ஒரு கருத்தை இங்கு கூறுவதற்கு நான் மன்னிக்கப்படுவேன் என்று நம்புகிறேன். இலங்கையின் தனித்துவமான சூழ்நிலைகள், இயற்கை அமைப்பும் சமூக ஒழுக்க அமைப்பும் - அதனை, எமது கிழக்கத்திய ஆட்சிப்பகுதிகளில் ஐரோப்பிய நாகரிகத்தின் விதையை விதைப்பதற்கு மிகவும் ஏற்ற இடமாக பிரித்தானிய அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டுகின்றன. அங்கிருந்து, அந்த நாகரிகம் இவ்வளவு விரிந்துள்ள இந்தப் பரந்த பிரதேசங்கள் முழுவதுமே பரவுமென நாம் நியாயமான முறையில் எதிர்பார்க்கலாம்" என்று சொன்னதை இங்கு கருத்திற்கொள்வது சாலச்சிறந்தது. (1)

மேலும் - "உச்ச இரகசியமானது" என்ற அடையா ளமிடப்பட்டு ஆங்கிலேய வான்படைத் தளபதியாலும், பேரரசின் பொதுச்சேவையாட்படையணித் தளபதியாலும், கடற்படை உதவித் தளபதியாலும் சிலோனின் சுதந்திர தினத்தன்று, உருவாக்கப்பட்ட ஆவணமொன்றின்படி: "சிலோனின் உள்ளகப் பாதுகாப்பிற்கு சிலோன் அரசாங்கம் பொறுப்பாக இருந்தாலும்கூட, எமது கரிசனைக்கு ஆபத்து ஏற்படும்போதிலும் உள்ளக வாரியாக எழும் சவால்களைக் கட்டுப்படுத்தும் வலுவை சிலோன் இழக்கும்போதிலும் எமது படையணிகளை களத்தில் இறக்கும் உரிமையை நாம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதுடன்; எமது கரிசனையைத் தக்கவைத்துக்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமையும் எமக்குரித்தானதாக எப்போதும் இருக்கவேண்டும்" (1) எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இங்கு கருத்திற்கொள்வதுடன் மீண்டும் 1971 இல் பிரித்தானியாவின் அமைச்சரவை, பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக்கொள்கைகள் குழுவின் வெளியுறவுச் செயலாளர் இலங்கை மீது பிரித்தானிய கரிசனையின் முக்கியத்துவத்தையும் அதற்காகத் தேவை யான எல்லாவற்றையும் செய்யவேண்டும் (2) என்றும் தெரி வித்திருந்ததையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

அதேவேளையில் இலங்கைக்கான சுதந்திரத்தை வழங்கும் செயற்பாடுகளின் போது தமிழ்த்தலைவர்கள் தமது இனத்திற்கான பாதுகாப்பை முன்னிறுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததை நவகாலனித்துவம் கருத்திற்கொண் டதுடன் தமிழினம் தலைவணங்க மறுக்கும் இனமென்பதை அவர்கள் காலங்காலமாகக் கற்றுவருவதையும் கருத்திற் கொண்டிருந்தது.

பண்டாரவன்னியனிடம் கற்ற பாடம் தொடங்கி, 1409 இல் சீனக் கடற்படைத் தளபதியால் பேர்சிய, சீன, தமிழ் மொழிகளில் மட்டும் பொறிக்கப்பட்டு யுனெஸ்கோவின் உலக ஆவணப் பாரம்பரியப் பதிவேட்டில் 2025 இல் பதிவைப்பெற்ற காலிக் கல்வெட்டுடன் இணைந்து வெளிப்படுத்தப்பட்ட பாடமும், 1815 வரை ஆங்கிலேயரை இறுதிவரை எதிர்த்து நின்று விழாதிருந்த கண்டி அரசும், 2006 ஒக்டோபர் 18 அன்று வல்லாதிக்க அரசுகளின் அச்சுறுத்தும் இரகசிய தகவலைத் தாங்கிப் பன்னாட்டு பிரதிநிதியாக வருகைதந்த ஜப்பானிய தூதர் யசூசி அக்காசியை தமது தேசியத் தலைவர் என ஈழத்தமிழர்களின் பெரும்பங்கு மக்கள் ஏற்றுக்கொண்டவர் சந்திக்க மறுத்ததும், தமது இன்னுயிர்களை விட சுயநிர்ணய உரிமையே மேல் என முள்ளிவாய்க்கால்வரை போரிட்ட ஈழத்தமிழ்மக்கள் விட்டுச்சென்ற செய்தியும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது வல்லாதிக்க அடிமைத்தனத்தை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாத மனோதிடமுடைய மக்கள் கூட்டமாக அவை ஈழத்தமிழர்களை அடையாளப்படுத்துகின்றன, பிரதிநிதித்து வம் செய்கின்றன.

இவற்றுள் 1948 இற்கு முன் நிகழ்ந்தவற்றைக் கருத்திற்கொண்ட நிலையில் யாரிடம் இலங்கையின் சுதந்திரத்தை வழங்க வேண்டும் என்ற நிலை எழுந்தபோது நிகழ்ந்த ஒரு பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடும் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானியா இலங்கையிடமிருந்து பெருமளவில் கொள்வனவு செய்த தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பொருட்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையானது அண்ணளவாக 72 மில்லியன் பவுண்களாக இருந்தது. (3) இத்தொகையினை பகுதி பகுதியாகப் பெற்றுக்கொள்ள அப்போதைய சிங்களத் தலைவர்கள் தயாராகியிருந்தனர். உண்மையில் சரியாக தொகை எவ்வளவு என்பதைக்கூட தமது தொடர்பாடல்க ளில் வெளிப்படுத்தாதிருப்பதற்குத் தயாராக சுதந்திரத்தின் பின்னரான அன்றைய நிதி அமைச்சரான ஜே.ஆர். ஜெய வர்த்தனா தயாராகியிருந்ததை வரலாறு பதிவு செய்துள்ளது.

இவையாவும் கருத்திற்கொள்ளப்பட்டே ஐக்கிய ராச்சியத்தினால் இலங்கையின் சுதந்திரம் ஒற்றை யாட்சிக்குள் வரையறுக்கப்பட்டு சிங்கள தேசத்திடம் ஒட்டு மொத்தமாக தாரைவார்க்கப்பட்டது.

ஆட்சியைப் பெற்றுக்கொண்ட சிங்கள இனம் இந்தத்தீவைசிங்களமயப்படுத்தும்செயலில்இறங்கியபோது உருப்பெற்றதே சிங்களப் பேரினவாதம். இந்தப் பேரினவாத ஒற்றையாட்சிக்கு என்றென்றைக்கும் ஆதரவு வழங்குவதன் ஊடாக இந்தத் தீவின் பூகோள அமைவிட ஆற்றலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று அன்றைய பிரித்தானியா மனதிற்கொண்டது.

அன்றிலிருந்து தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ளாத பிரித்தானிய அரசு ஈழத்தமிழர்களின் இனப்படுகொலைக்கு அனைத்து உதவிகளையும் வழங்கியதுடன் இனப்படுகொலைக்கான விசாரணைகளை முன்னெடுப்பதையும் தடுத்து வருகின்றது.

அதேவேளை தமிழினப்படுகொலைப் போரைப் பயன்படுத்தி ஸ்ரீலங்காவை மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள் விழுத்திய பிரித்தானியா உட்பட்ட மேற்குலகு தற்போது ஸ்ரீலங்கை அரசை பன்னாட்டு நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தனக்குத் தேவையான அனைத்தையும் அரசிடமிருந்து உறிஞ்சிக் கொள்கிறது.



இவ்வாறு வல்லாதிக்க அரசுகளிடம் விழுந்து கிடப்பதற்கு என்றென்றைக்கும் தமிழினம் ஒத்துப்போகாது என்பதை வரலாற்றிற் பலதடவைகள் வல்லாதிக்க அரசுகள் உணர்ந்து கொண்டுள்ளன என்பதை மேலே பார்த்தோம்.

இந்த அடையாளப்படுத்தலுடன் தென்னிந்தியத் தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இருக்கும் வர லாற்றுக்காலத் தொடர்பையும் இணைத்துப்பார்த்த வல் லாதிக்கத்திற்கு ஈழத்தமிழர்கள் என்றைக்கும் உவப்பான வர்களாக இருக்கப்போவதில்லை என்பது வெளிப்படையா கத் தெரிந்தது.

இதனால் தமக்குரித்தான இனமாகச் சிங்கள இனத்தையும் தமக்குரித்தான ஆட்சியாக சிங்கள ஆட்சியை யும் என்றென்றைக்கும் பேணிக்கொள்ள வேண்டும் என்ற முடிவானது பிரித்தானியரால் முன்மொழியப்பட்டு காலனித்துவ நீக்கத்தின் பின் வல்லாதிக்க மேற்குலகினால் இன்றுவரை பின்பற்றப்பட்டுவருகின்றது.

எனினும் சிங்கள தேசியம் சரியான பாதையில் செல்லுமாயின் மேற்குலகின் இந்த விருப்பத்தை நிறை வேற்றத் தடையாக அது உருவாகும் என்பதை முன்னு ணர்ந்துகொண்ட வல்லாதிக்கம் சிங்கள தேசியத்தைச் சிங்கள சொவினியமாக (Swinism / Chauvinism) மாற்று வதில் வெற்றிகண்டது. வல்லாதிக்கம் பெற்ற வெற்றி யானது சிங்கள தேசியத்தை வெற்றிகரமாக விழுங்கிக் கொண்டது. இதனால் தாம் வேறு சக்திகளுக்கு அடிமையாகிக் கிடக்கிறோம் என்பதைச் சிங்கள தேசம் உணர முடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தன்நாட்டின் சுதந்திரம், நலன், கலாசாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் அரசியல் எண்ணம் கொண்டி ருத்தலை தேசியத்துவம் என்கிறோம். எனது நாடு, எனது கொடி, எனது இனம், எனது மொழி, எனது பண்பாடு, எனது நிறம் என்ற எல்லா "எனதும்" தேசியத்துவத்தைச் சுட்டி நிற்கின்றன. மாறாக "எனது" மட்டுமே சிறந்தது, மேலானது என்ற எண்ணமும் ஏனையவை அனைத்தும் இழிவானவை என்றதுமான சிந்தனை சொவினியத்தை உருவாக்குகின்றது. சொவினியம் தரும் "ஏனையவை இழிவானவை" என்ற சிந்தனை அந்த இழிவானவற்றை ஒடுக்கவேண்டும் என்ற உந்துதலையும் தன்னிச்சையாக ஏற்படுத்துகின்றது. (5)

ஒன்றை உன்னதமாக்கவேண்டுமென்றால் மற்றை யதை இழிவாக்க வேண்டும் என்ற இருகோடுகள் தத்துவத் தின் அடிப்படையில் சுத்தமான ஆரிய இரத்தம் கொண்ட சிங்கள பௌத்த உன்னத ஆரிய இனத்தை உருவாக்கத் தமது வரலாற்று-எழுத்தாண்மை, தொல்பொருள்-இயல், மானுட-இயல் (மனித உடல் உளம்சார்ந்த முழு ஆராய்ச்சி) ஆகியவற்றின் தொழிற்பாட்டு அறிவைப் பயன்படுத்திய பிரித்தானியா அதே அறிவைக் கொண்டு ஈழத் தமிழினத்தை வந்தேறு குடிகளாக்கி இழிநிலைப்படுத்தியது. (6)

இவ்வாறு இழிநிலைப்படுத்தலென்பது இனப் படுகொலைக் கான நீண்ட செயற்பாட்டில் ஒரு படிநிலையாக இருப்பதை பேராசிரியர் கிறகரி எச். ஸ்டான்ட்டன் வெளிப்படுத்தியுள்ளார். (7) சிங்கள சொவினியத்தின் கூறுகள் பல இருந்தாலும் மிகமுக்கியமாக இனச்சோவினிசம் (Ethnic or Racial Chauvinism) மொழிச்சோவினிசம் (Linguistic Chauvinism) மதச்சோவினிசம் (Religious Chauvinism) ஆகிய மூன்றிலும் சிங்கள சொவினியம் மிகவும் ஆழமாக தங்கியிருப்பதைக் காணலாம்.

இந்த மூன்று கூறுகளும் உண்மையிலேயே ஈழத்தமிழினத்தின் மீது அவர்களுக்கிருக்கும் பயத்தின்பால் மேலோங்கியதேயன்றி வேறொன்றுமில்லை.

1955 நவம்பர் 13 ஆம்திகதி அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தெரிவித்ததாக 1955 நவம்பர் 14 இல் சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான செய்தியின்படி அந்தப் பயம் இவ்வாறு வெளியாகியிருந்தது.

"சமத்துவம் வழங்கப்படுவதென்பதன்கருத்து சிங்கள இனத்தின் பேரழிவு என்பதாகும். தமிழர்கள் தமது மொழி, கலாசாரம், மனத்திடம் என்பவற்றால் மிகவலு வான இனத்தவர்கள். அவ்வலுவை எம்மீது அவர்கள் திணித்து விடுவார்கள்" (8)

1958 இல் முதலாவது இனப்படுகொலைத் தாக்கு தல் கல்லோயாவில் ஆரம்பித்தது. அன்றிலிருந்து இன்று வரை ஈழத்தமிழினமும் சிங்கள சொவினியத்தின் பசிக்கு இரையாகிவருகின்றது. அவ்வாறே பன்னாட்டு ஆதிக்க சக்திகளின் காலவாய்க்கு சிங்கள தேசியமும் இரையாகிக் கொண்டிருக்கிறது.

இரண்டு தேசியங்களும் அழிக்கப்பட்ட இலங் கையை என்றென்றைக்கும் தனது கைப்பாவையாக வைத்திருக்கலாம் என்பதை வல்லாதிக்க உலகு நன்றாக அறிந்திருக்கின்றது. சிங்கள தேசத்துடன் தமிழ்த் தேசத்தையும் சேர்த்து ஸ்ரீலங்கா அரசு வல்லாதிக்கத்திடம் ஈடுவைக்கும் என்பதையும் 2009 இற்குப் பின்னரான காலப்பகுதி தெளிவாக உணர்த்திநிற்கின்றது. இந்த அறிவைக்கொண்டே தனது கைப்பாவையாக ஸ்ரீலங்காவை மாற்றியுமுள்ளது.

சிங்கள சொவினியத்திலிருந்து சிங்கள தேசியம் தன்னை விடுவித்துக் கொள்ளும்வரை ஸ்ரீலங்காவில் அமைதி நிலவப் போவதில்லை.

**உணாத்துணைகள்: –**

பன்னாட்டுக்குற்றங்கள், இ.நா. ஸ்ரீஞானேஸ்வரன், ஸ்ரீலங்காவிற்கான முதற் பதிப்பு, பக்கம் 200 மேற்சான்ன அடிக்குறிப்பின் பக்கம் 201

International Bank for Reconstruction and Development (The World Bank), UNN 11 Ceylon Report on the Economy, page 10

Treaty Series, Treaties and international agreements registered or filed and recorded with the Secretariat of the United Nations, VOLUME 182

Banal Nationalism, Michael Billig, SAGE Publication, Edition 2004

People Tribunal in Sri Lanka, Breman, Germany, 07 to 10 December 2013. p. 12

பன்னாட்டுக்குற்றங்கள், இ.நா. ஸ்ரீஞானேஸ்வரன், ஸ்ரீலங்காவிற்கான முதற் பதிப்பு, பக்கம் 65

People Tribunal in Sri Lanka, Breman, Germany, 07 to 10 December 2013. p. 23

• • •




**மருதன் ராம்**

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தில் முதுகெலும்பாகவும், அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் முதன்மைத்துறையாகவும்பெருந்தோட்டத்துறைதிகழ்கிறது. இந்நிலையில், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு 2026ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், பெருந்தோட்டத் துறையின் உட்கட்டமைப்பு, மலையக மக்களின் வாழ்வாதார மேம்பாடு, வெளிநாடுகளிலிருந்து திரும்புவோருக்கான காணி வழங்கல், அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாபகரமான செயல்பாடு மற்றும் நவீன ஆராய்ச்சி மேம்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, முக்கிய பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

குறிப்பாக வெளிநாட்டுக்கு தொழிலுக்காக சென்றுள்ள இலங்கையர்களின் எதிர்காலத்துக்காக முதலீட்டு நோக்கத்தில் காணிகளை வழங்குவது குறித்தும் பெருந்தோட்ட நிறுவனங்களை ஒன்றிணைப்பதுடன் அவ்வாறான நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதன்படி, வெளிநாடுகளில் தங்களது சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு தாய்நாடு திரும்பும் இலங்கைத் தொழிலாளர்களின் எதிர்கால முன்னேற்றத்தையும், அவர்களின் சேமிப்பை நாட்டில் பயனுள்ள வகையில் முதலீடு செய்வதையும் ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி ஒரு புதிய திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

நாட்டில் தற்போது பயன்படுத்தப்படாமல் தரிசாக வும் பயனற்ற முறையிலும் கிடக்கும் பெருந்தோட்டக் காணிகளை அடையாளம் கண்டு, அவசியமான செயற் திட்டச் சேவைகளுடன் கூடிய நிலங்களாக ஒருங் கிணைத்து, நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு வழங்கு வதற் கான வேலைத்திட்டமொன்றை விரைந்து தயாரிக் குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத் தியுள்ளார்.

இது புலம்பெயர் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தை உறுதி செய்வதோடு, நாட்டின் பயன் படுத்தப்படாத காணிகளை உற்பத்தித் திறனுள்ள நிலங்களாக மாற்றவும் உதவுமென தெரிவிக்கப்பட்டுள் ளது. அதேநேரம், மலையக மக்களின் நீண்டகால தேவைகளான வீட்டுவசதி மற்றும் அடிப்படை உட்கட்ட மைப்பு மேம்பாடுகளுக்கு இக்கலந்துரையாடலில் மிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

மலையக பெருந் தோட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்காக நடை முறைப்படுத்தப்பட்டு வரும் 10,000 வீடுகளைக் கட்டும் திட்டத்தை எவ்வித தாமதமுமின்றி உரிய காலத்திற்குள் விரைவாக நிறைவு செய்து மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளதாக அவரது ஊடகப்பிரிவு விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் “500 தேயிலை கிராமங்கள்” திட்டத்தின் பணிகளை, கிராமிய மட்டத்தில் செயற்படும் “சமூக சக்தி” போன்ற ஏனைய அபிவிருத்தி திட்டங்களுடன் இணைத்து ஒருங்கிணைந்த முறையில் விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த கலந்துரையாடலின் போது அரச பெருந் தோட்ட நிறுவனங்கள் வியத்தகு அடிப்படையில் இலாபத்தில் வளர்ச்சியை காண்பித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேயிலை, தென்னை, இறப்பர், முந்திரி மற்றும் பனை போன்ற பயிர்ச் செய்கைகளிலும், உட்கட்டமைப்பு மேம்பாட்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் இலாபமும் ஈட்டப்பட்டுள்ளதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, 06 அரச பெருந்தோட்ட நிறுவனங்களும் விரைவாகத் தமது இலாபத்தை அதிகரித்து வருகின்றன. இதற்கிடையே தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தோட்டங்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. குறிப்பாக தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பெருந்தோட்டத்துறையை வலுப்படுத்துவதற்காக நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் அரசுக்கு உரிய வர்த்தக நோக்கமற்ற நிறுவனங்கள் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது.



முந்தைய அரசாங்கங்களால் நிறுவனங்களுக்குக் காணிகளை வழங்கும் போது கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அரசாங்கத்தால் வழங்கப்படும் காணிகள் தொடர்பாக பலமான ஒப் பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது குறித்த நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக நிதியமைச்சின் மூலம் குழுவொன்றை நியமிக்கும்படியும் அறிவுறுத்தினார்.

இதேவேளை, இலங்கையின் தேயிலை உற்பத்தி யில் பெரும் பங்கு வகிக்கும் சிறு தேயிலைத் தோட்டங் கள் சுமார் 60,000 ஹெக்டெயார் நிலப்பரப்பில் பரந்து விரிந்துள்ளன. இவற்றில் மறுபயிரீடு செய்வதற்காக 2026 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 450.06 மில்லியன் ரூபாவில், இதுவரை 155.07 மில்லியன் ரூபா திறம்படச் செலவிடப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்ற விடயமும் வெளிப்படுத்தப்பட்டது அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பயிர் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இறப்பர் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கவும் மீள் பயிரிடலை விரிவுபடுத்தவும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2026 வரவு செலவுத் திட்டத்தில் 137 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நிலவும் களப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து உற்பத்தி யைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### ‘டித்வா’ அனர்த்த நிவாரணத் திட்டம்

அதேநேரம் இந்த கலந்துரையாடலின் போது டித்வா புயலின் தாக்கம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ‘டித்வா’ இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களை மீண்டும் பயிரிடுவதற்கான நிவாரணத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள் ளது. இதேவேளை, தேசிய பெருந் தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் உயர் பாடநெறிகளையும் பட்டயப் பயிற்சிகளையும் நாட்டின் பல்கலைக்கழகங்கள் ஊடாக வழங்கி, துறை சார்ந்த வல்லுநர்களை உரு வாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி கள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அணில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட முக்கிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டம், மலையக சமூகத்தின் கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கும் இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் மறுமலர்ச்சிக்கும் ஒரு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது.

பயன்படுத்தப்படாத நிலங்களை உகந்த முறை யில் பயன்படுத்துதல், மலையக மக்களின் அடிப்படை உரிமையை உறுதி செய்தல், அரச நிறுவனங்களை இலாபப்பாதைக்கு திருப்புதல் மற்றும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த பயிர்ச்செய்கை விரிவாக்கம் ஆகிய திட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் போது, அது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் மலையக மக்களின் வாழ்வியலையும் புதியதோர் உயரத்திற்கு எடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

• • •

## உலகை அதிர வைத்த... தொடர்ச்சி...

படுத்தப்படும் ‘டைனமிக் ரேண்டம்-அக்சஸ் மெமரி’ (DRAM) சிப்களைத் தயாரிப்பதில் சீனாவின் முன்னணி நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தற்போது உலகளாவிய DRAM சந்தையில் சுமார் 8% பங்கை இந்நிறுவனம் கொண்டுள்ளது; இதன் மூலம் சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், எஸ்கே ஹைனிக்ஸ் (SK Hynix) மற்றும் மைக்ரான் (Micron) ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உலகின் நான்காவது பெரிய உற்பத்தியாளராக இது திகழ்கிறது.

சீனாவின் குறைக்கடத்தி (semiconductor) துறை யின் வளர்ச்சியைத் தடுக்க அமெரிக்கா பல ஆண்டுக ளாக முயற்சித்து வருகிறது. 2022 முதல், மேம்பட்ட சிப் தயாரிப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மீது வாஷிங்டன் விரிவான ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது; நவீன குறைக்கடத்திகளைத் தயாரிக்கும் சீனாவின் திறனைக் குறிவைக்கும் வகையில் 2024-ன் பிற்பகுதியில் இக்கட்டுப்பாடுகள் மேலும் விரிவாக்கப் பட்டன. AI மற்றும் ராணுவத் தேவைகளுக்குப் பயன்படும் அதிநவீன சிப்களைத் தயாரிக்கத் தேவையான கருவிகள் சீனாவிற்குக் கிடைப்பதைக் கட்டுப்படுத்துவதே இம்நட வடிக்கைகளின் நோக்கமாகும்.

தொழில்நுட்பத் துறையில் முன்னிலை வகிப் பதற்கான அமெரிக்கா மற்றும் சீனா இடையிலான போட்டி யில் குறைக்கடத்திகள் ஒரு முக்கிய களமாக மாறியுள்ளன.




A.M.L லம்பேட்

சிங்கள-பௌத்த பயங்கரவாதத்தையும் வேறுபடுத்திப் புரிந்துகொள்வது அவசியம். பௌத்தம் கருணை, அஹிம்சை மற்றும் அனைத்து உயிர்களுக்கும் மரியாதை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. ஆனால் சிங்கள-பௌத்த தேசியவாதம் (Sinhala-Buddhist Terrorism)என்பது இலங் கையை முதன்மையாக சிங்கள-பௌத்தர்களுக்கே உரிய நாடாக கருதும் பயங்கரவாத கட்டமைப்பைக் குறிக்கிறது.

"சிங்கள-பௌத்த பயங்கரவாதம்" (Sinhala-Buddhist Terrorism)என்னும் கட்டமைப்பை ஆய்வு செய்ய, அதனை "இன-மத பெரும்பான்மைவாத அரசு பயங்கர வாதம்" (Ethno-Religious Majoritarian State Terrorism) என்ற கோணத்தில் அணுக வேண்டும். இது ஒரு சாதாரண அரசுசாரா தீவிரவாதக் குழுவாகச் செயல்படாமல், பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய கலப்புச் சித்தாந்தமாக (Hybrid Ideology) இயங்குகிறது:



1) இன-அரசியல் தேசியவாதம்(Ethno-Political Nationalism): இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்த மானது; தமிழர்களும் ஏனைய சிறுபான்மையினரும் இரண்டாம் தரக் குடிமக்கள் அல்லது சுதேசிகளற்றவர்கள் என்ற அரசியல் கோட்பாடு.

2) மத மேலாதிக்கவாதம் Religious Supremacism): மகாவம் சத்தின் தம்மதீப (தர்மத்தின் தீவு) கதையாடலால் தூண் டப்பட்டு, நிலப்பரப்பைப் புனிதப்படுத்தி, அரசியல் ஆதிக் கத்தையும் அரசு வன்முறையையும் நியாயப்படுத்தப் பௌத்த மதத்தை ஆயுதமாக்குதல்.

இந்த பயங்கரவாத அமைப்பு,சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள நிறுவன வலையமைப்புகள் மூலம் இயங்குகிறது. முதலாவதாக பௌத்த அடிப்படைவாத துறவிகள் (The Clerical-Political Nexus) (மகாசங்கத்தினர்) அரசியல் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்திக ளாக நின்று இந்த பயங்கரவாத கட்டமைப்பின் வேர்களாக காணப்படுகினறனர்.


இரண்டாவதாக அரசு நிர்வாகமும் சட்ட அமுலாக்க மும் (State Bureaucracy & Law Enforcement) அரசி யல்வாதிகள், அரசு அதிகாரிகள், காவல்துறை மற்றும் நீதித்துறை நிறுவனங்கள் இதற்கான நிர்வாக, சட்ட மற்றும் செயல்பாட்டுப் பாதுகாப்பை வழங்குகின்றன.

அடுத்ததாக இராணுவப் படைகள் (Military Forces) சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலப்பரப்புகளை ஆக்கிரமித்து ஆக்கிரமிப்பையும் மக்கள் தொகை கட்டுப்பாட்டையும் முன்னெடுத்து கொண்டுள்ளதுடன் இனஇழிப்பு. இனச் சுத்திகரிப்பு மற்றும் போர்குற்றம் போன்றவற்றின் களசெயற் பாட்டாளர்களாக உள்ளனர்.

பொருளாதார நன்மைகளும் பொதுமக்களும்(Economic Interests & Majoritarian Civil Society ) உள்ளூர் வர்தகர்களும் சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப் புகளும் அரசு ஆதரவு பெற்று மறைமுக மற்றும் வெளிப்படையான ஆதரவு. பொருளாதார, நிதியுதவியும் சிங்கள பௌத்த மத்தியவர வர்க்கத்தினரை ஒன்று சேர்ப்பதற்கு அடிப்படையாக உள்ளனர்..

இந்தச் "சிங்கள-பௌத்த பயங்கரவாதம்" அரசுச் சட்டங்கள் மற்றும் நீதித்துறை நிறுவனங்கள்(Constitution, and State Power) மூலமாகவே நேரடியாக இயங்குகிறது. சிங்கள அரசாங்கத்தின் இரண்டாம் குடியரசு அரசியலமைப் பின் (பிரிவு 9) உள்ளடக்கமாக பௌத்தத்திற்கு முதன்மை அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கி, சட்டத்தின் முன் அனைவரும் சமம் (பிரிவு- 12) என்ற அடிப்படை உரிமையை மீறுகிறது.

மனித குலத்திற்கு ஒவ்வாத(Draconian Legislation) கொடிய சட்டங்கள் (பயங்கரவாதத் தடைச் சட்டம் - PTA) 1979 இல் கொண்டுவரப்பட்ட இச்சட்டம்,தமிழ் மக்களுக்கு எதிராகத் தன்னிச்சையான கைதுகள், நீண்டகாலச் சிறைவாசம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்குதல்களை மேற்கொள்ளத் தொடர்ச்சியாகப் சிங்கள பௌத்த பயங்கரவாதத்தினால் வெளிப்படையாகவே பயன்படுத்தப்படுகிறது.



நீதிமன்றப் பாதுகாப்பும் (Judicial Impunity) நீதிமன்ற கட்டமைப்பும் சிங்கள பௌத்த பயங்கரவாதத்தின் கருவி களாக அரசு வன்முறைகள், போர்க் குற்றங்கள் மற்றும் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் முறையான அரசுப் பாதுகாப்பையும் முழுமையான விலக்களிப்பையும் பெறும் விதமாக கட்டமைக்கபட்டுள்ளது.

சிங்கள பௌத்த பயங்கரவாதத்தின் செயற்பாட்டு உத்தியாக வன்முறையின் வடிவங்கள் (Manifestations of Violence) போர்க் குற்றங்கள் (War Crimes) முதல் கட்ட மைக்கப்பட்ட இனப்படுகொலை வரை (Structural Genocide) மேற்கொள்ளப்பட்டது. அதன் ஒரு அங்கமாகவே போர்க் குற்றங்கள் மற்றும் கொடூரங்கள்(War Crimes & Mass Atrocities) 2009 போரின் இறுதிப் பகுதியில் "பாதுகாக்கப்பட்ட மண்டலங்கள்" மீதான குண்டுவீச்சு, பட்டினி போடுதல், பாலின வன்முறைகள் மற்றும் படுகொலைகள் போன்ற தீவிர போர்க் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. மேலும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வலிந்து காணாமல் (Enforced Disappearances & Genocide) ஆக்கப்பட்டுள்ளனர்; மேலும் உடல் ரீதியான மற்றும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகள் (physical and structural genocide) இவற்றின் தொடர்ச்சியாக தொடர்கின்றன.




மேலுமாக சிங்கள பௌத்த பயங்கரவாதத்தினால் அரசு ஆதரவு பெற்ற குடியேற்றமும் சிங்களமயமாக்கல் (State-Sponsored Colonization & Sinhalization ) தமிழர்களின் பாரம்பரிய தாயக நிலங்களை ஆக்கிரமித்தல், எல்லை களை மாற்றுதல் மற்றும் தமிழ்ப் பகுதிகளில் பௌத்த சின்னங்களைச் சட்டவிரோதமாக நிறுவி மக்கள்தொகை கட்டமைப்பை மாற்றுதல் போன்றவை அரச-சட்டகட்ட மைப்புக்களின் அடிப்படை செயற்பாடாக உள்ளது. இவர்கள், தமிழ் மக்களின் மனித உரிமைகள், சுயநிர்ணய உரிமை மற்றும் சட்ட அடிப்படை உரிமைகள் ஆகியவை திட்டமிட்டு மறுக்கப்படுகின்றமையை நோக்கமாக கொண்டு செயற் படுகின்றனர்.

இறுதியாக சிங்கள-பௌத்த பயங்கரவாதம் என்பது ஒரு சாதாரண தீவிரவாத இயக்கம் அல்ல, அது இலங்கை அரசின் கட்டமைப்பிற்குள் ஆழமாகப் பொதிக்கப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பாகும். அதற்கெதிரான ஈழத்தமிழர்களின் மூலோபாய கொள்கைகள் பரந்துபட்ட வகையில் திட்டமிடப்பட்ட இலக்கினை நோக்கி நகர்த்தும் உத்தியும் மீள்கட்டமைப்பு செய்யப்பட வேண்டி உள்ளது.

• • •

## புதிய நோய்: ... தொடர்ச்சி...

பக்கவாதம் (partial paralysis) ஏற்பட்டது. நோய் அறிகுறிகள் தொடங்கிய ஒன்று முதல் இரண்டு நாட்களுக்குள் அவை உயிரிழந்தன. மீதமுள்ள ஐந்து யானைகளின் உடல்கள் மிகவும் சிதைந்த நிலையிலோ அல்லது விலங்குகளால் உண்ணப்பட்ட நிலையிலோ காணப்பட்டதால், கால்நடை மருத்துவர்களால் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை.

KWS-இன் தகவலின்படி, "இந்த பாதிப்பு முக்கியமாக வயது வந்த பெண் யானைகளையும் அவற்றின் குட்டி களையும் பாதித்துள்ளது; பாதிக்கப்பட்டவற்றில் ஒரே ஒரு வயது வந்த ஆண் யானை மட்டுமே இருந்தது."

பாதிக்கப்பட்ட பல யானைகளிடமிருந்து சேகரிக் கப்பட்ட மாதிரிகளில் சாத்தியமான நச்சுப் பொருள் ஒன்று கண்டறியப்பட்டதாக நைரோபி பல்கலைக்கழகத்தின் ஆரம்பக்கட்ட ஆய்வக முடிவுகள் தெரிவிப்பதாக KWS கூறியதை Kenyans.co.ke மேற்கோள் காட்டியுள்ளது.

# அவுஸ்திரேலிய குடிசன மதிப்பீடும் தமிழர்களும்

Importance of the 2026 Census for the Tamil Community

When completing the Census online or on paper, members of the Tamil community are encouraged to record:

Language Spoken at Home: Tamil

For the ancestry question, please consider entering the following two responses:

Ancestry 1: Tamil

Ancestry 2: Sri Lankan Tamil or Indian Tamil

Recording TAMIL (in box 1) as an ancestry helps to unite Tamils across countries and generations under a shared identity, while country-specific responses such as SRILANKAN TAMIL or INDIAN TAMIL (in box 2) preserve each community's unique background.

Together, these responses provide a more complete picture of "who we are" and help to obtain support for Tamil language schools, interpreting services, aged care, health services, community programs and government funding.

தமிழ்ச் சமூகத்திற்கு 2026 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கியத்துவம்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பை பூர்த்தி செய்யும்போது, தமிழ்ச் சமூகத்தினர் வீட்டில் உள்ள அனைவருக்கும் பின்வருமாறு பதிவு செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள்:

**கேள்வி - வீட்டில் பேசப்படும் மொழி எது ?: TAMIL**

**கேள்வி உங்களது பூர்வீகங்கள் எது ?**

**பூர்வீகம் 1: TAMIL**

**பூர்வீகம் 2: SRI LANKAN TAMIL அல்லது INDIAN TAMIL**

பூர்வீகமாக Tamil என்று பதிவு செய்வது, பல்வேறு நாடுகளையும் தலைமுறைகளையும் சேர்ந்த தமிழர்களை ஒருங்கிணைந்த தமிழ் அடையாளத்தின் கீழ் இணைக்க உதவுகிறது.

அதேவேளை, நாடு சார்ந்த Sri Lankan Tamil அல்லது Indian Tamil என்ற தமிழ் சார்ந்த பூர்வீக பதில்கள் ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவமான பின்னணியைப் பாதுகாக்கின்றன.

இந்தப் பதில்கள் "நாம் யார்" என்பதை மேலும் முழுமையாகப் பிரதிபலிப்பதுடன், தமிழ் மொழிப் பாடசாலைகள், மொழிபெயர்ப்பு சேவை, முதியோர் பராமரிப்பு, சுகாதாரச் சேவைகள், சமூகத் திட்டங்கள் மற்றும் அரசாங்க நிதியுதவிகளை எமது தமிழ் சமூகத்துக்கு பெறவும் பெருமளவில் உதவுகின்றன.

உங்களின் ஆதரவுக்கு நன்றிகள். Thank you for your support









தமிழில்: **ஆர்தீகன்**

புது தில்லியில் பெரும் அமைதியின்மை நிலவி வருகிறது. போராட்டக்காரர்கள் காவல்துறையினருடன் மீண்டும் மீண்டும் மோதலில் ஈடுபட்டு வருவதுடன், ஆர்ப் பாட்டக்காரர்கள், காவல்துறை, பாதுகாப்புப் படையினர் மற்றும் பத்திரிகையாளர்கள் காயமடைந்ததாகவும் தகவல் கள் வெளியாகியுள்ளன.



அரசு அதிகாரிகள் போராட்டத் தலைவர்களைத் தொடர்பு கொண்ட போதிலும், மத்திய தில்லியில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், வெறும் மூன்று மாதங்களில் ஒரு ஆன்லைன் மீம்-ஆக இருந்து அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ள கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (CJP) சின்னங்களை ஏந்திய இளைஞர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

போராட்டங்களைத் தணிக்கும் முயற்சியாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை இரண்டு பொது வேண்டுகோள்களை விடுத்தார். X தளத்தில் அவர் வெளியிட்ட ஒரு பதிவில், நீட் தேர்வுத் தாள்களைக் கசியவிட்டவர்கள் மீது கடுமையான நட வடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்ய, அரசு விரைவு நீதிமன்றங்களை அமைக்கும் என்று அறிவித்தார்.




தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (நீட்) ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சத்திற்கும் அதிகமான இந்திய மாணவர்கள், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரி இடங்களுக்காகப் போட்டியிடுகின்றனர். தற்போதைய அமைதியின்மைக்கு இந்த விவகாரமே காரணமாக அமைந்தது. மே மாதம் நடந்த தேர்வுத் தாள் கசிவு, தேர்வை ரத்து செய்ய வழிவகுத்ததுடன், டஜன் கணக்கான பரீட்சார்த்திகள் தற்கொலை செய்துகொள்ளவும் காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த இயக்கம் முதலில் உருவானதன் மையப் பிரச்சினை இதுவல்ல என்றபோதிலும், இந்த ஊழல் விரைவிலேயே சி.ஜே.பி. அமைப்பின் முக்கிய ஒன்றுகூடல் புள்ளியாக மாறியது. போராட்டக்காரர்களின் செயல்திட்டம் விரைவில் விரிவடைந்தது; அரசியல் ஆர்வலர்களும், தற்போது எதிர்க்கட்சிகளும் கூட, இந்த இயக்கத்தை வெளிப் படையாக ஆதரித்து, கல்விச் சீர்திருத்தத்தையும் தாண்டிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

வினாத்தாள் கசிவுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று மோடி உறுதியளித்தார். “நமது இளைஞர்களின் நலன் மற்றும் எதிர்காலத்தை விட முக்கியமானது எதுவும் இல்லை. நமது இளைஞர்களின் எதிர்காலத்திற்குத் தீங்கு விளைவிக்க முயற்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தப்பவிடப்படமாட்டார்கள்,” என்று அவர் ‘எக்ஸ்’ (X) தளத்தில் பதிவிட்டார்.

அதே நாளில் பின்னர், நாடாளுமன்றத்தில் வினாத்தாள் கசிவைத் தடுப்பதற்கான புதிய மசோதாவைக் கொண்டுவருவதாக உறுதியளித்து, ‘செல்ஃபி’ பாணியிலான காணொளி உரை ஒன்றை மோடி வெளியிட்டார். இது ஒரு அரிதான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.




அதனைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை(24) இரவு, முன்பு அதிகம் பயன்படுத்தாத ‘இன்ஸ்டாகிராம்’ (Instagram) தளத்தில் மற்றொரு காணொளியை அவர் வெளியிட்டார். அதில், தனது முதல் காணொளி உரையைப் பார்த்ததற்கும், “ஆழமான கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை” பகிர்ந்து கொண்டதற்கும் இளம் பின்தொடர்பாளர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார். வியாழக்கிழமை(23) காணொளியை வெளியிட்ட பிறகு, ஒரே இரவில் சுமார் 1 மில்லியன் இன்ஸ்டாகிராம் பின்தொடர்பாளர்களை மோடி பெற்றதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சனிக்கிழமையன்று(25), போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையை ஏற்று, கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது ராஜினாமாவை அறிவித்தார்.

‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட கடிதத்தில், நடை பெற்று வரும் போராட்டங்களைக் கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்ததாக அவர் கூறினார். “ஜந்தர் மந்தர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு, தேசவிரோத சக்திகள் இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்பதிலும், நாட்டின் ஒற்றுமை சிதையாமல் இருக்க வேண்டும் என்பதிலும், இந்தியாவின் எந்தவொரு மாணவரின் எதிர்காலமும் சட்ட நடவடிக்கைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதிலும் நான் உறுதியாக இருக்கிறேன். நமது குழந்தைகள் தங்கள் நேரத்தை படிப்பிலும், தங்கள் தொழில் வாழ்க்கையை கட்டமைப்பதிலும் செலவிட வேண்டும்,” என்று அவர் எழுதினார்.



ராஜினாமாவைத் தொடர்ந்து, சிபிஜே (CPJ) அமைப்பின் தலைவர்கள் போராட்டத்தை “உடனடியாக” கைவிடுவதாக அறிவித்ததுடன், போராட்டக்காரர்களை வீடு திரும்புமாறும் கேட்டுக்கொண்டனர்.

பிரதமரின் காணொளி உரைக்குச் சில மணி நேரங்களுக்குப் பிறகு, ‘கரப்பான் பூச்சி’ (Cockroach) போராட் டத்தின் முகமாக மாறிய சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக், தனது 26 நாள் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார். சிபிஜே போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் அரசின் பிரதிநிதிகளான சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா மற்றும் அணுசக்தித் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் ஆகியோர் முன்னிலையில், நள்ளிரவுக்குப் பிறகு மேதாந்தா மருத்துவ மனையில் அவரது உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.



“தேர்வு முறையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த விவகாரம் இந்திய நாடாளு மன்றத்தில் விவாதிக்கப்படும் என்று அரசாங்கமும் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதியளித்ததைத் தொடர்ந்து, 26 நாட்களுக்குப் பிறகு நான் எனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டேன்,” என்று வாங்சுக் கூறினார்.

“சமீபத்திய நீட் (NEET) தேர்வு வினாத்தாள் கசிவு

**தொடர்ச்சி: பக்கம் 16**




# மிகப்பெரும் போருக்குத் தயாராகும் இரு பெரும் கூட்டணிகள்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

வளைகுடாவில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஆரம்பித்த போர் மெல் மெல்ல ஒவ்வொரு நாடுகளாக உள்வாங்கி விரிவடைந்து வருகின்றது. இந்த வாரம் அமெரிக்க மற்றும் சவுதி அரேபிய கூட்டணிப் படையினர் ஈராக்கில் உள்ள ஈரானின் ஆதரவு படைப் பிரிவான 240,000-க்கும் மேற்பட்ட போராளிகளைக் கொண்ட PMF மீது வான் வழித் தாக்குதல்களை மேற்கொடுள்ளன.



ஹூதிகள் மட்டுமே ஈரானின் ஒரே பிராந்திய கூட்டாளிகள் அல்ல என்பதால் PMF-ம், ஜூலை மாத இறுதியில் சவுதி நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தியது. இந்த PMF குழு, பெரும்பாலும் IRGC-யால் வழிநடத்தப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் ஈராக்கில் அமெரிக்காவின் கே.சி-135 எரிபொருள் நிரப்பு விமானத்தின் மீதூன ஏவுகணைத் தாக்குதல்கள் உட்பட 600 இற்கு மேற்பட்ட ஏவுகணை அற்றும் ஆழில்லாத தாக்குதல் விமானங்களின் தாக்குதல்களுக்கு இந்த குழுவே பொறுப்பு என அமெரிக்கா கூறிவருகின்றது.



எனவே தான் PMF தளங்கள் மீது அமெரிக்க-சவுதி கூட்டு குண்டுவீச்சை நடத்தியது. இதில் 20-க்கும் மேற்பட்ட போராளிகள் கொல்லப்பட்டனர் மற்றும் 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். PMF பழிவாங்குவதாக சபதம் செய்துள்ளது, மேலும் தாக்குதல் நடந்த சில மணிநேரங்களுக்குப் பிறகு, ஈரான் ஜோர்டானில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஏவுகணைகளை ஏவியது.

தற்போதைய புவிசார் அரசியல் நிலப்பரப்பு இப்போது உறுதியாக நிலைபெற்றுள்ளது: IRGC-யால் ஒருங்கிணைக்கப்பட்ட ஈரானிய கூட்டாளிகள், அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியாவுடன் நேரடி மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

செங்கடல், பாப் அல்-மண்டேப் நீரிணை ஆகியவற்றை அன்சர் அல்லா அமைப்பு மூடியுள்ளது. சவூதி கப்பல் போக்குவரத்திற்கு ஒரு கடற்படை முற்றுகையை விதித்து மூடியுள்ளது. அதை உடைத்துக்கொண்டு செல்ல முயன்ற மூன்று கப்பல்களை அவை வெற்றிகரமாகத் தாக்கின.

ஜூலை மாத நடுப்பகுதியில் சனா விமான நிலையம் மீது சவூதி வான்வழித் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து, ஏமன் தெற்கு சவூதி அரேபியாவில் உள்ள அப்ஹா விமான நிலையம் மீது நேரடித் தாக்குதல்களை நடத்தி பதிலடி கொடுத்தது.

அது சவுதி அரேபியாவின் எண்ணெய்க் கப்பல் களான என்செலியா மற்றும் லைலா, மற்றும் இரசாயன எண்ணெய்க் கப்பலான என்சிசி கசல். கப்பல்களை தாக்கிதுடன், 1,200 கி.மீ நீளமாக சவுதி அரேபியாவின் எரிபொருள் விநியோகக் குழாய்க்கும் அச்சுறுத்தல் விடுக்கின்றது. நாள் ஒன்றிற்கு 5 மில்லியன் பரல்கள் எண்ணையை விநியோகம் செய்யும் இந்த குழாய் ஹார்மூஸ் நீரிணை மூடப்பட்ட பின்னர் செங்கடல் மற்றும் சுயஸ் கால்வாய் ஊடான பிரதான வழங்கல் பாதையாக இருந்தது.




ஏமன் படைகள், ஜிசான் துறைமுகத்தில் உள்ள அராம்கோ சுத்திகரிப்பு நிலையங்களையும், செங்கடல் கடற்கரையில் உள்ள யான்புவில் உள்ள சுத்திகரிப்பு வசதிகளையும் குறிவைத்து பாலிஸ்டிக் ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் ஏவின. மேலும், ஆளில்லா விமானத் தாக்குதல்கள் கிழக்கு-மேற்கு குழாய்வழியைத் தாக்கின. இதனால், சவூதி பிரதேசம் வழியாக யான்புவிற்குச் செல்லும் கச்சா எண்ணெய் போக்குவரத்து உள்கட்டமைப்பு சேதமடைந்தது.

ஏமன் மீது சவுதி அரேபியா வான் தாக்குதல்களை நடத்தியத்திற்கு பதிலடியாக சவுதி அரேபியாவின் மிகப் பெரும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான அரம்கோ நிறுவனத்தின் மீது குதீஸ் அமைப்பினர் தாக்குதல்களை நடத்தயதால் அந்த நிறுவனத்தின் ஒரு பகுதி மூடப் பட்டுள்ளது. நாள் ஒன்றிற்கு 400,000 பரல்களை உற்பத்தி செய்யும் அந்த நிலையத்தின் இழப்பு பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பாகவே சவுதி கருதுகின்றது. செங்கடல் வழி யாகச் செல்லும் சவூதி எண்ணெய் ஏற்றுமதிகளுக்கு அழுத்தம் கொடுக்க ஈரான் முயல்வதால், இந்த முழு யேமன் நடவடிக்கையும் தெஹ்ரானின் செல்வாக்கின் கீழ் செயல் படுகிறது.

எனவே தான் ஏமன் படைகளுக்கு எதிராக சவூதி அரேபியா சர்வதேச தரை மற்றும் கடல் கூட்டணியை அமைக்கிறது. யேமன் படைகள் பின்வாங்க மறுப்பதால், பாப் அல்-மண்டேப் ஜலசந்தியை வலுக்கட்டாயமாக மீண்டும் திறப்பதற்கான ஒரு சர்வதேசக் கூட்டணியை சவூதி அரேபியா அடுத்த வாரம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செங்கடல், பாப் அல்-மண்டேப் நீரிணை மற்றும் ஏடன் வளைகுடா ஆகிய பகுதிகளில் ஒத்துழைப்பை வலுப் படுத்துவதற்கான சவுதி தலைமையிலான சர்வதேச கடல்சார் தற்காப்புக் கூட்டணியில், அமெரிக்கா உள்ளிட்ட 43 நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் பங்கேற்றுள்ளன.

இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், உண்மை யில் அங்கு எந்தவொரு 'தற்காப்புக்' கூட்டணியும் இல்லை என்பதுதான். கப்பல்களை அனுப்பும் எவருக்கும், ஏவுகணை வலிமை மிக்க ஒரு நாட்டிற்கு எதிரான பெரும் மோதலில் தாங்கள் பங்கேற்கிறோம் என்பது ஏற்கனவே தெரிந்திருக்கும் ஒரு விஷயமே. இந்த நடவடிக்கைக்கு தவிர்க்க முடியாமல் இராணுவ பலம் தேவைப்படும்.



ஜலசந்தியின் ஆப்பிரிக்கப் பக்கத்தை உருவாக்கும் செங்கடல் கடற்கரை நாடுகளான எகிப்து, சூடான், ஜிபூட்டி மற்றும் சோமாலியா ஆகியவை ஏற்கனவே பங்கேற்க ஒப்புக்கொண்டுள்ளன. சவூதியர்கள் பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இந்த நாடுகள் அனைத்தும் ஏற்கனவே இப்பகுதியில் போர்க்கப்பல்களைக் கொண்டுள்ளன மற்றும் வாஷிங்டனின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன. ஐக்கிய அரபு அமீரகத்தைத் தவிர, வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (GCC) உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், கூட்டணியில் சேர

தொடர்ச்சி: பக்கம் 16

## கரப்பான் பூச்சி ... தொடர்ச்சி...

விவகாரத்தில் தற்கொலை செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்படும் என்றும், அமைதியான முறையில் போராடிய மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப் படாது என்றும் அரசாங்கம் உறுதியளித்தது."

மோசமடைந்து வந்த உடல்நிலை குறித்த கவலைகளின் அடிப்படையில், மருத்துவ ஆலோசனைகள் மற்றும் டெல்லி உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகளைத் தொடர்ந்து, ஜூலை 18 அன்று மத்திய டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் போராட்டக் களத்திலிருந்து வாங்சுக் கட்டாய மாக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

முக்கியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டதற்காக, போராட்டத்தை ஆதரித்த சில விமர்சகர்கள் வாங்சுக்கை உடனடியாக விமர்சித்தனர். வெள்ளிக்கிழமை(24) இரவு வெளியிடப்பட்ட உணர்ச்சிகரமான காணொளி ஒன்றில் இந்த விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், 26 நாட்களுக்குப் பிறகும் இப்போது தான் ஒரு "நன்னடத்தைச் சான்றிதழை" (character certificate) சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா என்று கேள்வி எழுப்பினார்.

மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பிறகு தான் எதிர்கொண்ட இன்னல்களையும் வாங்சுக் விவரித்தார்; இதில் பல விஷயங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வராமல் இருந்தன. நாடு முழுவதும் வன்முறை பரவுவதைத் தடுக்கவும், போராட்டக்காரர்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கவுமே தான் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டதாக அவர் விளக்கினார். கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்பது தனது முக்கியக் கோரிக்கை அல்ல என்றும் (ஏனெனில் அது மட்டுமே அமைப்பை மாற்றிவிடாது என்றும்) அவர் கூறினார்; மாறாக, ஜந்தர் மந்தர் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பின்னர் கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதியான உத்தரவாதமே அரசாங்கத்திடம் இருந்து தனக்குத் தேவைப்பட்ட முக்கியக் கோரிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

குறிப்பிடத்தக்க வகையில், தலைநகரில் உள்ள இரண்டு முக்கியப் பொதுப் பல்கலைக்கழகங்களான டெல்லி பல்கலைக்கழகம் (DU) மற்றும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU) ஆகியவை, ஜந்தர் மந்தர் அருகே நடைபெறும் பேரணிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்க வேண்டாம் என்று அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை வெளியிட்டன. "சட்டவிரோ தக் கூட்டங்களில்" சேருவதையோ அல்லது மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குச் சட்டச் சிக்கல்களை உருவாக்கி, எதிர்கால வேலைவாய்ப்பு வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடிய பொறுப்பற்ற சமூக ஊடகச் செயல்பாடுகளில் ஈடுபடு வதையோ தவிர்க்குமாறு அவை எச்சரித்தன. மேலும், சூழ்நிலையை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய "போலியான மற்றும் தவறான தகவல்கள்" சமூக ஊடகங்களில் பரவுவ திலிருந்து விலகி இருக்குமாறும் டெல்லி பல்கலைக்கழகம் மாணவர்களை வலியுறுத்தியது.

புது தில்லியின் மையப்பகுதியான ஜந்தர் மந்தரில் ஜூன் மாதம் அமைதியான அமர்முறைப் போராட்டமாகத் தொடங்கிய ஆர்ப்பாட்டம், இந்த வாரத்தில் வன்முறை மற்றும் குழப்பத்தில் முடிந்தது.

திங்களன்று, போராட்ட இடத்திலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள நாடா ளுமன்றக் கட்டிடத்தை நோக்கி CJP அமைப்பு ஒரு பேரணியை ஏற்பாடு செய்தது. முந்தைய கூட்டத்தொடரின் இடைவேளைக்குப் பிறகு, அன்றுதான் நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்கவிருந்தது. இந்தியா முழுவதிலுமிருந்து - குறிப்பாக புது தில்லியிலிருந்து - வந்த இளைஞர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர். ஆனால், பேரணிக்கு அனுமதி அளிக்காத காவல்துறை, இரும்புக் தடுப்புகளைப் பயன்படுத்தி அவர்களைத் தடுக்க முயன்றது.

பேரணி தொடங்கிய உடனேயே நிலைமை கட்டுப்பாட்டை மீறியதால் குழப்பம் ஏற்பட்டது. கூட்டத் தைக் கலைக்கக் காவல்துறை தடியடி மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியது. சுமார் 180 பேர் காயமடைந்ததாகவும், அவர்களில் 118 பாதுகாப்புப் பணி யாளர்களும் 60 போராட்டக்காரர்களும் அடங்குவர் என்றும் டெல்லி காவல்துறை பின்னர் தெரிவித்தது. காவல்துறை அதிகாரிகள் மீதான கொடூரமான தாக்குதல்களைக் காட்டும் காட்சிகள், போராட்டக்காரர்கள் உண்மையிலேயே அமைதியான மாணவர்களா அல்லது வெளியாட்கள் இதில் இணைந்து பெரிய சதித்திட்டத்தை முன்னெடுத்தனரா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

இந்தக் கலவரத்தின்போது இந்தியாவின் முக்கிய செய்திச் சேனல்களைச் சேர்ந்த பல பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டனர். நேரலையில் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தபோது சிலர் துன்புறுத்தப்பட்டனர்; இச்சம் பவங்களின் காணொளிகள் இணையத்தில் பரவலாகப் பகிரப்பட்டு, பயனர்களால் கண்டிக்கப்பட்டன. வன்முறையில் ஈடுபட்டவர்கள் "அமைதியான போராட்டக்காரர்களின்" ஒரு பகுதியினர் அல்ல என்று CJP உறுப்பினர்கள் தெரிவித்தனர். காவல்துறையின் நடவடிக்கையை CJP தலைவர் அபிஜீத் டிப்கே கொடூரமானது என்று வர்ணித்தார். இந்த ஒடுக்கு முறை நடவடிக்கைக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

நன்றி: ரஸ்ய ருடே

**தொடரும்...**







## மிகப்பெரும் போருக்குத் ... தொடர்ச்சி...

வாய்ப்புள்ள நாடுகளின் மொத்தப் பட்டியல் சுமார் 50 ஆக உயர்ந்துள்ளது.

இருப்பினும், சவூதியின் இந்த உத்தி கடலைத் தாண்டியும் நீள்கிறது. சம்பளம், ஆள்சேர்ப்பு, ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை கணிசமாக அதிகரிப்பதன் மூலம், யேமனுக்குள் உள்ள தனது பதிலிப் படைகளைத் ரியாத் திரட்டியுள்ளது. இந்தத் தரைப்படையானது, 20,000 முதல் 30,000 வீரர்களைக் கொண்ட திர் அல்-வத்தான் பகுதியையும், ஹத்ரமாத் பழங்குடிக் கூட்டணியைச் சேர்ந்த 15,000 போராளிகளையும், தற்போது ரியாத்துக்குத் தங்கள் விசுவாசத்தை மாற்றிக்கொண்ட, ஐக்கிய அரபு அமீரகத்தால் நிதியளிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான முன்னாள் போராளிகளையும் சார்ந்துள்ளது.

செங்கடல் மற்றும் ஹார்மூஸ் நீரிணை ஆகியவை மூடப்பட்ட பின்னர் சுயஸ் கால்வாயைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செய்யலாம் என நினைத்த வேளையில் எகிப்த்தின் துறைமுகத்தில் நின்ற அமெரிக்காவின் எரிவாயு கப்பல் உட்பட இரண்டு கப்பல்கள் மீதான தாக்குதல் அந்த வழியையும் மூடியுள்ளது. அதாவது இந்த 3 வழிகளும் மூடப்பட்டால் 35 தொடக்கம் 40 விகிதமான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படும் என்பதுடன், உலகின் பொரு ளாதாரம் முற்றாக முடக்கப்படலாம் என்பதால் ஒன்றில் மிகப் பெரும் போர் இல்லையேல் சமாதானம் என்ற நிலைக்கு வந்துள்ள வளைகுடா போர்.

## ரஷ்யாவில் தேடப்படுவோர்... தொடர்ச்சி...

செய்யத் தூண்டப்படுவார்கள்.

அந்த சேனலிலும் பிற தளங்களிலும் சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக வந்த ரஷ்ய அறிக்கைகளைப் புறக்கணித்து, அதை மூடத் தவறியதாகக் கூறப்படும் அந்தத் தளத்தின் உரிமையாள ராக துரோவ் தனித்துக் காட்டப்பட்டார் என்று அந்த அறிக்கை கூறியது. துபாயைத் தளமாகக் கொண்ட அந்த கோடீஸ்வரர் சர்வதேச தேடப்படும் நபர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவார் என்று FSB தெரிவித்துள்ளது.

டெலிகிராமின்தலைமைநிர்வாகஅதிகாரிஇதற்கு முன்னர் பிரெஞ்சு அதிகாரிகளிடமிருந்து இதேபோன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார்; அந்தச் செய்திப் பரிமாற்றச் செயலியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட குற்றங்களுக்கு அவரே பொறுப்பு என்று அவர்கள் குற்றம் சாட்டினர். அவர் அந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்; மேற்கத்திய நாடுகளின் சார்பாகத் தனது தளத்தில் அரசியல் தணிக்கையை விதிக்குமாறு தன்னை வற்புறுத்துவதற்காக பாரிஸ் குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்துகிறது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## தொடர்ந்து அழிக்கப்பட்டு... தொடர்ச்சி...

பட்டபோதிலும் ஏனைய பகுதிகளில் இது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.பெருமளவான நிதிகள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு செல்வதனால் எதிர்ப்புகள் ஏற்படவில்லையென்ற தகவல்களும் இருக் கின்றது.

எனவே கிழக்குத் தமிழர்களின் பொருளாதார எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், நடுத்தரக் குடும்பங்களை இந்த நிதிப் பொறியில் இருந்து மீட்கவும் உடனடி விழிப்பு ணர்வு அவசியமாகிறது. எந்தவொரு நிதி நிறுவனத்திலும் முதலீடு செய்வதற்கு முன், அது இலங்கை மத்திய வங்கியின் பதிவுபெற்ற நிறுவனம்தானா என்பதை மக்கள் கட்டாயம் சரிபார்க்க வேண்டும். சந்தை நிலவரத்திற்கு மாறாக சாத்தியமற்ற அதிக லாபத்தை வாக்குறுதியாக அளிக்கும் எந்தவொரு திட்டத்தையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டும். அவசரப்பட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடாமல் தகுதியான நிதி ஆலோசகர்களின் வழிகாட்டலைப் பெறுவதுடன், அரசு வங்கிகள் மற்றும் பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நம்பகமான அமைப்புகளில் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்வது நடுத்தரக் குடும்பங்களின் எதிர்காலத்தையும் சேமிப்பையும் பாதுகாக்கும்.

• • •

## நீதித்துறையுடன்... தொடர்ச்சி...

தமது எதிர்காலத்துக்கு பலனளிக்கக்கூடிய விடயத்தில்; எவ்வாறு பக்கசார்பின்றி தீர்ப்பளிக்க முடியும் என்ற வினா எழுவதுடன், அது ஒட்டுமொத்த நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கே பேராபத்தானதாக முடியும்.

சர்வஜன வாக்கெடுப்பு இன்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு அரசாங்கம் வயதெல்லை அதிகரிக்கும் சட்டமூலத்தை நிறைவேற்ற முனைவது, ஜனநாயகக் கொள்கைகளுக்கு எதிரானது.

தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற் காகவும், தனது ஆட்சிக்கெதிரான தீர்ப்புகளைத் தடுப் பதற்காகவும் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் இப்திகார் சவுத்ரியைப் பதவியிலிருந்து நீக்கி, நீதித்துறையைக் முடக்க முயன்றார்.

இதன் விளைவாக, நாடு தழுவிய அளவில் வழக் கறிஞர்களும், சிவில் சமூகமும், பொதுமக்களும் வீதிக்கு இறங்கி மிகப்பெரிய 'நீதிபதிகள் பாதுகாப்புப் போராட்டத்தை' முன்னெடுத்தனர். இப்போராட்டத்தின் எழுச்சியே இறுதியில் முஷாரப்பின் சர்வாதிகார ஆட்சி வீழ்வதற்கும், அவர் நாட்டை விட்டுத் தப்பியோடுவதற்கும் முதன்மையான காரணமாக அமைந்தது.

இலங்கையிலும்கூட, கடந்த காலத்தில் மூன்றாவது முறையும் ஆட்சியில் நீடிப்பதற்காகவும், நீதித்துறை உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களை தன் கைக்குள் வைப்பதற்காகவும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவந்தது. நீதித்துறையின் சுயாதீனத்தைக் கேள்விக்குள்ளாக்கிய இந்த அதிகாரம் சார்ந்த மமதையே, மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு அலையை உருவாக்கி 2015 இல் அவரது ஆட்சி வீழ் வதற்கு வழிவகுத்தது.

இவ்வாறு, தலைவர்கள் தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக தெரிவு செய்து தோல்வி யடைந்த வழியையே அநுர அரசாங்கமும் தற்போது தெரிவு செய்திருக்கின்றது. அந்த பயணம் ஆட்சி அதிகாரத்துக்கே மிகவும் ஆபத்தானது.

ஆகவே, நீதித்துறையின் சுயாதீனத்தையும் பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் பாதுகாக்கும் பொருட்டு, அரசாங்கம் தனது தூரநோக்கற்ற வயதெல்லை அதிகரிப்பு முன்மொழிவைக் கைவிட்டு, பரந்த கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் வெற்றிடங்களை நிரப்பும் ஜனநாயக வழிமுறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, உயர் நீதிமன்றத்தில் நிலவும் 8 நீதியர சர் வெற்றிடங்களையும், மேல் நீதிமன்றத்தில் உள்ள வெற்றி டங்களையும் அரசியலமைப்புக்கு அமைவாக எவ்வித தாமதமுமின்றி உடனடியாக நிரப்ப வேண்டும்.

கீழ் நிலை நீதிமன்றங்களுக்கு (மாவட்ட நீதி மன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள்) புதிய நீதிபதிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறைகளை விரைவுபடுத்த வேண்டும்.

'இலங்கையின் நீதித்துறை பற்றிய மதிப்பீடு மற்றும் மூலோபாய நடவடிக்கைத் திட்டம்' ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, வணிக, ஒப்பந்த மற்றும் முதலீட்டுச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பிரத்தியேக நீதிமன்றங்களையும், கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்களுக்குத் தேவையான போதிய பௌ திக வளங்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வழக்குகளைத் தாக்கல் செய்தல், ஆவணங்களைப் பரிமாறுதல் மற்றும் கட்டளைகளைப் பிறப்பித்தல் போன்ற நடைமுறைகளை கணினிமயமாக்கி இணையவழி நீதி மன்ற முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்.

சாட்சியப் பதிவுகள் மற்றும் சிறிய அளவிலான விசாரணை நடைமுறைகளுக்கு காணொளி மாநாட்டு (Video Conferencing) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

சிவில் மற்றும் வணிக ரீதியான தகராறுகளை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொள்ளும் மத்தியஸ்தம் (Mediation) மற்றும் நடுவர் மன்ற (Arbitration) முறைகளை ஊக்குவிக்க வேண்டும். இது ஆரம்ப நீதிமன்றங்களின் சுமையைப் பெருமளவில் குறைக்கும்.

வழக்குகளுக்குத் தேவையின்றி தவணைகள் வழங்கப்படுவதைக் கட்டுப்படுத்தி, குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் வழக்குகளை முடிப்பதற்கான 'வழக்கு மேலா ண்மை அமைப்புகளை' (Case Management System) கட்டா யமாக்க வேண்டும்.

இதற்கும் அப்பால் நீதித்துறையின் சுயாதீனம், நீதிபதிகளின் பதவிக்காலம் அல்லது சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வரும் போது, இலங்கை சட்டத் தரணிகள் சங்கம், நீதித்துறை ஆணைக்குழு, சிவில் சமூகம் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் வெளிப்படையான கலந்தாலோசனைகளை நடத்தி பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால் இவை எதனையுமே செய்யாது வெறுமனே வயதெல்லையை மாற்றும் அநுர அரசாங்கத்தின் முயற்சி யானது, நீதித்துறையை நிறைவேற்று துறையால் கட்டுப் படுத்தும் போக்கின் வெளிப்பாடாகும்.

நீதித்துறை என்பது அரசாங்கத்தின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும் ஓர் அரசியல் உபகரணம் அல்ல. மக்கள் நீதித்துறை மீது வைத்துள்ள இறுதி நம்பிக் கையையும் சிதைத்துவிடும்.

அரசாங்கம் தனது மூன்றில் இரண்டு பெரும் பான்மை என்ற பலத்தின் மீதான இறுமாப்பைக் கைவிட்டு, இந்தத் தூரநோக்கற்ற அரசியலமைப்புத் திருத்தத்தைக் உடனடியாகக் கைவிட வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால், சட்டத்தின் ஆட்சி யைச் சீர்குலைத்த அரசாங்கமாக வரலாற்றுப் பழியைச் சுமப்பதோடு, நீதித்துறையின் சுயாதீனத்திற்காகப் போராடும் மக்கள் சக்தியால் ஆட்சியின் இருப்பையே இழக்க நேரிடும் என்பதே வரலாறு உணர்த்தும் எச்சரிக்கையாகும்.

• • •

## செம்மணி மனிதப்... தொடர்ச்சி...

உறுதிப்படுத்த சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக் கப்பட வேண்டும்.

02. சர்வதேச தரநிலைகள்: மனித எச்சங்களை அகழ்ந் தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை 'மினசோட்டா நெறிமுறை' உள்ளிட்ட சர்வ தேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

03. ஐ.நா. கண்காணிப்பு மற்றும் பிரசன்னம்: செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்துச் சான்றுகளைப் பாதுகாக்க வேண்டும். மேலும், சாட்சியாளர்களின் பாதுகாப்புக்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியமாகும்.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் மறைமா வட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப் பாணம் மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட் தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

## அபகரிக்கப்பட்ட ... தொடர்ச்சி...

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் சதி வேலைகளிலேயே அரசு இறங்கியுள்ளது.

எனினும், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உறுதியாக நின்று போராடினால் மட்டுமே எமது காணி நிலங்களை வெற்றிகரமாக மீட் டெடுக்க முடியும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் வலுவாக வலியுறுத்தியுள்ளனர்.

மக்களின் காணிகளைச் அபகரிக்கத் துடிக்கும் அரசின் கோரிக்கைக்கு இணங்க, குறித்த கலந்துரை யாடல் தினத்திற்கு முன்னர் எந்த வகையான இழப்பீடு, எந்தக் காலப்பகுதிக்குள் வழங்கப்படும் என்பது குறித்த தெளிவான உத்தரவாதத்தை அரசு எழுத்து மூலம் வழங்க வேண்டும் என தெரிவிக்க வேண்டும்.

அரசின் சூழ்ச்சி வலையில் சிக்கி, இழப்பீட்டிற்காக எமது பூர்வீகச் சொத்துக்களை இழந்து விடாமல் மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


## உயிர்த்த ஞாயிறு... தொடர்ச்சி...

சாட்சிகளை மீண்டும் பதிவு செய்து வழக்கை மறுவிசார ணைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, வழக்கு கொழும்பு நிரந்தர மூவர டங்கிய மேல் நீதிமன்ற ஆயம் முன்னிலையில் மீண் டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் இன் றைய தினம் தீர்ப்பை அறிவித்த நீதிபதிகள் ஆயம், போதிய புலனாய்வு தகவல் கிடைத்த போதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறியமையால் 270 உயிர்கள் இழக்கப்பட்டதுடன் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்த தாக சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி பிரதிவாதியான முன்னாள் காவல்து றைமா அதிபர் பூஜித் ஜயசுந்தர தமது கடமைகளை தவறி யுள்ளதாகவும் கொழும்பு நிரந்தர மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற ஆயம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

## சூப்பர் மார்க்கெட் முதலீடு: ஒரு சிறந்த தொழில் வாய்ப்பு.



இன்றைய காலகட்டத்தில், அத்தியாவசிய பொருட்கள் சார்ந்த தொழில்களில் முதலீடு செய்வது மிகவும் பாதுகாப்பான மற்றும் இலாபகரமான முடிவாகும். அதில் குறிப்பாக, சூப்பர் மார்க்கெட் (Supermarket) தொழில் முன்னணி வகிக்கிறது. ஒரே கூரையின் கீழ் காய்கறிகள், மளிகைப் பொருட்கள், பழங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் என அனைத்தும் கிடைப்பதால், பெரும்பாலான மக்கள் சூப்பர் மார்க்கெட்டுகளையே நாடுகின்றனர்.

இத்தொழிலைத் தொடங்குவதற்கு முன், வணிகம் செய்யத் தேர்ந்தெடுக்கும் இடம் மிக முக்கியமானது. மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகள், குடியிருப்பு வளாகங்கள் மற்றும் போதிய வாகன நிறுத்துமிடம் (Parking) வசதி கொண்ட இடங்களைத் தேர்வு செய்வது விற்பனையை பல மடங்கு உயர்த்தும்.

ஆரம்பத்தில் கடை வாடகை, உள்வடிவமைப்பு (Interior Design), சரக்கு கொள்முதல் மற்றும் கணினி வசதிகளுக்கு கணிசமான முதலீடு தேவைப்படும். இருப்பினும், தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்கி, புன்னகையுடன்கூடிய சிறந்த சேவையை அளித்தால் வாடிக்கையாளர்களின் நிலையான நம்பிக்கையைப் பெற முடியும்.

டிஜிட்டல் மயமாக்கல், ஹோம் டெலிவரி (Home Delivery) போன்ற நவீன வசதிகளைப் பயன்படுத்துவது வியாபாரத்தை விரைவாக வளர்க்க உதவும். சரியான திட்டமிடலும் திறம்பட நிர்வாகமும் இருந்தால், சூப்பர் மார்க்கெட் முதலீடு நீண்ட கால அடிப்படையில் நிலையான வருமானத்தையும் தொடர் வளர்ச்சியையும் தரும்.




மு. தியா
செல்வநாயகபுரம்

## தேங்காதே



ஓடிக் கொண்டே இரு..
முன்னேறா விடினும்
முயற்சி செய்து கொண்டே இரு...

சோர்ந்து போய் விடாதே..
சோர்வு உன்னை முறியடிக்கும்..
நீ சோர்வை முறியடி...

உன் பாதையை நோக்க
ஓடிக் கொண்டே இரு..

ஓரிடத்தில் தேங்காதே..
தேக்கம் உன்னை
பலவீனப்படுத்தும்

அதற்காய் உன்னை
மறக்காதே..
ஓடத்தான் வேண்டும்..
ஓய்வும் வேண்டும்..

என்றோ ஓர் நாள் வரும்
உன் முயற்சிலெல்லாம் விருட்சமாகும்..

நீ கடைசியாய் தேங்கியது யது கருவறையாகத் இருக்க வேண்டும்..

நீ தேங்கப் போவது உன் கல்லறையாக இருக்கட்டும்..

**அது வரை ஓடிக் கொண்டே இரு..**

ஹப்ஸா க்வில்
பாலையூற்று

## பெற்றோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் !

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காலத்தில் மாணவர்களை பாடசாலைக்கு வாகனங்களில் கூட்டிச் செல்லுவதனால் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி உங்களுடையகருத்து என்ன?

தற்போதைய காலகட்டத்தில் எரிபொருள் ஒரு அடிப்படை தேவையாகவே மாறிவிட்டது. ஆகையால் பலரும் எரிபொருள் பயன்படுத்துவதாலும் , இதனால் தட்டுப்பாடு ஏற்படுவதன் காரணமாக அதிக எரிபொருளை ஒருவர் வாங்குவதனாலும், ஏனையோருக்கு இல்லாமல் போவதன் காரணமாக எரிபொருளை வாங்குவதற்காக அதிக நேரம் செலவிட வேண்டிய தேவையால் எம்முடைய அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதனால் மாணவர்களை சீராக பாடசாலை அனுப்ப முடியாத சூழ்நிலையும் , உரிய நேரத்திற்கு அனுப்ப முடியாத நிலைமையும் மற்றும் மேலதிக வகுப்புகளுக்கு செல்ல முடியாத நிலைமையும் ஏற்படுகின்றது. மேலும் எல்நினோ தாக்கங்கள் காரணமாக தற்போதைய காலத்தில் மாணவர்களை பாடசாலைக்கோ, மேலதிக வகுப்புகளுக்கோ நடந்து செல்லக்கூடிய நிலைமையும் இல்லாமல் போனதால் பெற்றோர்கள் மிகுந்த சிரமம் அடைந்துகொண்டிருக்கின்றனர். இதற்கான QR போன்ற ஒரு சில தீர்வுகள் கிடைத்தாலும், இன்னும் இந்த நிலைமை முழுமையாக மாற்றம் அடையவில்லை.

சு.திகழினி
கன்னியா




## கூடா நட்பு கேடாய் முடியும்

அர்ஜுன், கார்த்திக், சுரேஷ் மூன்று பேரும் ஒரே வகுப்பில் படிக்கும் நெருங்கிய நண்பர்கள். அர்ஜுன் நன்றாகப் படிப்பவன். ஆசிரியர்கள் சொல்வதை கேட்டு ஒழுக்கமாக இருப்பான். கார்த்திக் சுமாராகப் படித்தாலும் நல்ல குணமுள்ளவன். ஆனால் சுரேஷ் வகுப்புக்கு ஒழுங்காக வரமாட்டான். வீட்டுப்பாடம் செய்ய மாட்டான். தவறான பழக்கங்கள் அவனிடம் இருந்தன. மற்ற ஆசிரியர்கள் “அவனோடு சேராதீர்கள்” என்று எவ்வளவோ சொல்லியும் அர்ஜுனும் கார்த்திக்கும் “அவன் நம்ம நண்பன், நாம் திருத்திவிடலாம்” என்று அவனுடனே சுற்றினார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல சுரேஷ் அவர்களை பயிற்சி வகுப்புக்கு போகாமல் விளையாட்டு மையத்திற்கு அழைத்துச் சென்றான். “ஒரே ஒரு முறைதான்” என்று ஆரம்பித்தது பின்னர் பழக்கமாகிவிட்டது. படிப்பு கெட்டது. இறுதித் தேர்வு நேரத்தில் சுரேஷ் தேர்வு அறையில் துண்டு பார்த்து மாட்டிக்கொண்டான். அவனுடைய பையில் இருந்த துண்டுகள் அர்ஜுன் மற்றும் கார்த்திக் பைகளிலும் இருந்ததால் மூவரையும் தலைமையாசிரியர் அழைத்து தண்டித்தார்.

தேர்வு முடிவு வந்தபோது சுரேஷ் தோல்வியடைந்தான். அர்ஜுனும் கார்த்திக்கும் மறுதேர்வு எழுத வேண்டிய நிலை வந்தது. அப்போதுதான் அவர்களுக்கு புரிந்தது. தவறான நண்பனோடு சேர்ந்ததால் தங்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகிவிட்டது என்று.

ஆகவே நாம் நண்பர்களை தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நல்லவர்களோடு சேர்ந்தால் நாமும் உயர்வோம்.



ரா.அக் ஷயா
புதுக்குடியிருப்பு



# தாயகமும் வாழ்வும்







